அரசியல் குழப்பம் !

மொழித்தெளிவும் பெறமாட்டீர்! செய்தித்தாள்
சிறுநூல்கள் எல்லா வற்றும்
பழித்தவுரை வரைகின்றீர்! பண்பிழந்தே
எழுதுகின்றீர் ! பணத்தைச் சேர்த்தீர் !
வழித்தெளிவும் கொளமாட்டீர் ! அரசியலை
வளர்ப்பதுவாய்க் குழப்பு கின்றீர்!
விழித்தெழவும் விரும்புகிலீர் ; என்னபயன்
விளைத்திடுவீர் தமிழ்நாட் டிற்கே!

கடகம் (ஆடி)

தி. பி. கககள

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 4 | கடகம் தி. பி. ௧௯௯௭ (1966 சூலை) | ஓலை 6

இந்தி எதிர்ப்பும் அரசியல் குழப்பங்களும்!

சென்ற மாதம் 18, 19-ஆம் பக்கல்களில் தஞ்சையில் நடந்த மாணவர்கள் இந்தியெதிர்ப்பு மாநாட்டிற்கு நான் எதிர்பாராத வகையில் அழைக்கப்பட்டேன். இதற்கு முன் சென்னையில் நடந்த இந்தியெதிர்ப்பு மாநாட்டின் நடவடிக்கைகள் சரிவர அமையாமற் போனமையால், அவ்வாறின்றி இம்மாநாட்டைச் சிறப்புற நடத்துமாறும், மாநாட்டின் நிகழ்ச்சிகளாலும் தீர்மானங்களாலும் மாநில அரசுக்கும் நடுவணரசுக்கும் மாணவர்களின் உள்ளத்தே கனன்றுகொண்டிருக்கும் தாய்மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் தெளிவுற உணர்த்தப் பெற வேண்டுமென்றும் முன்பே மாநாட்டு அமைப்பாளருக்கு எழுதியிருந்தோம். இதுபோலவே மாணவர்களின் கல்வி நலத்திலும் நாட்டு

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நடப்புகளிலும் மிகவும் அக்கறை கொண்டிருந்த தொழிலறிஞர் திரு. கோ. துரைசாமி (G. D. NAIDU) அவர்களும், மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் மாநாட்டு அமைப்பாளருக்கு முன்பே மடல்வழி அறிவித்ததாகவும் பின்னர் அறிந்தோம். பாவாணர் அவர்கள் தம் மடலில் இப்பொழுதுள்ள அரசியல் அமைப்பில் இது போன்ற மாநாடுகள் எத்தனைதாம் நடந்தாலும் அவை பயனளிக்கா' என்பதைத் தெளிவாக எழுதியிருந்தார்.

பொதுவாகக் காலஞ்சென்ற மறைமலையடிகளார் முன்னின்று நடத்திய மாநாடுகள் முதலாக அரசியல் சார்ந்தும் சாராமலும் நடந்த இந்தியெதிர்ப்பு மாநாடுகள் எண்ணிக்கையிலடங்கா. அவ்வாறிருந்தும் அரசியல் சார்ந்த கட்சிகளாலோ அரசியல் சாராத நடுநிலையாளர்களின் தலையீட்டாலோ இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை என்பதை எல்லாரும் ஒப்புக்கொண்டே ஆகல் வேண்டும். இதனை நன்குக ஊன்றிப் பார்த்தால் இவ்வியலாமைக்கு இரண்டு அசைக்க முடியாத காரணங்கள் இருத்தல் புலப்படும். அவை, ஒன்று தமிழகத்தில் இந்தியை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டவர்கள், கொள்கின்றவர்கள் எல்லாரும் தாய் மொழியாகிய தமிழைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும் சரிவர முயற்சி எடுத்துக்கொள்ளாமை. இந்நிலை இங்குள்ள மக்களுக்குத் தாய்மொழிப் பற்றில்லாமல் போக இடம் தந்தது. இரண்டாவது, அரசியலமைப்பில் வடநாட்டினர் கையே ஓங்கியிருந்து பிறமாநிலங்களும் தமிழகமும் அவர்களுக்கு அடிமைப்பட்டிருப்பது. எனவே இந்தித் திணிப்பைக் கண்டிக்கின்றவர்களும், எதிர்க்கின்றவர்களும் இந்த இரண்டு நிலைகளையும் புரிந்துகொண்டு அவற்றை ஒருங்கே களைய முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும். இவ்விரண்டு அடிப்படையான காரணங்களையும் சரிவர உணராமலோ புறக்கணித்தோ இந்தியை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொள்ளுகின்ற தனிப்பட்ட ஒருவரோ ஒரு கட்சியோ வேறுவழிகளில் இந்தியைத் தமிழகத்தினின்று விரட்டிவிடமுடியும் என்று முழங்குவதும், வாய்ப்பறை கொட்டுவதும் 'கையில் ஊமன் கண்ணில் காக்கும் வெண்ணெய் உணங்கல்' போலப் பயனில்லாத செயலாகவே முடியும் என்று உணர்ந்து கொள்ளவேண்டுகின்றோம். எனவே இந்த இரண்டு நிலைகளையும் மனத்திற்கொண்டே 'தென்மொழி' கடந்த ஆறு ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகின்றது. இதன் பயனாகவே மாணவர்களிடையேயும் நடுநிலையான தமிழர்களிடையேயும் ஒருவகையான முழுத்தெளிவும் விழிப்புணர்வும் ஏற்பட்டு வருவதை உண்மையுள்ளம் கொண்ட எவரும் மறுக்கார்.

இந்த அடிப்படைக் கருத்துகளை மனத்திற்கொண்டே மாணவர்கள் மாநாடு செப்பமாக நடைபெற வேண்டும் என்று அமைப்பாளர்களை வேண்டிக் கொண்டோம். ஆனால் அரசியல் அமைப்புகளைத் தங்களைத்தவிர வேறெவரும் சரிவரப் புரிந்து கொள்ளமுடியாது என்று

தருக்கிக் கொண்டுள்ள ஒருசில கட்சி யமைப்பாளர்கள் இந்தித் திணிப்புக்கு அரசியல் வல்லாண்மையே காரணமாக இருப்பதாலும், அவ்வரசியல் ஆளுமையைப் பேராயக் கட்சியே கைப்பற்றியிருப்பதாலும் அதனை யொழிப்பதும், அரசுக் கட்டிலில் தாங்கள் அமர்வதுமே இந்தியை ஒழிக்கச் சரியான வழியென்று இட்டுக் கட்டிப் பேசித் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பெருக்கி வருகின்றனர். இந்தப் போலி நடவடிக்கைகளால் ஏமாற்றப்பெற்ற மாணவர்கள் ஒருசிலரும் மாணவத் தலைவர்களும் மாணவர்களின் கருத்தை அரசியல் கட்சிக் கொள்கைகளுடன் பொருந்தப் பேசி இக்கால் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அந்தக் குழப்பத்தின் சாயலாகவே தஞ்சை மாணவர் இந்தியெதிர்ப்பு மாநாடு நடந்து முடிந்தது என்று கூறினால் அது பிழையாகாது.

நாம் கூறிய கருத்துக்கு ஒப்புக் கொண்டதாகவும் இரண்டு நாட்கள் முன்பே வந்திருந்து மாநாட்டின் செயல் முறைகளை ஒழுங்குபடுத்துமாறும் எனக்கு மாநாட்டுச் செயலாளர் மடல் எழுதியிருந்தமையால், யாங்களும் நம் இடையருத் தமிழ்த் தொண்டு முட்டுப்படாவழி சில முன்னேற்பாடுகளைச் செய்து முடித்து மாநாட்டிற்கு ஒருநாள் முன்பாகவே புறப்பட்டுச் சென்றேம். ஆனால் தஞ்சை சென்றபின் அங்கு நடந்த முறைகளையும் கட்சி ஊடுருவலையும் கண்டு பெரிதும் வருந்தினேம். மாநாட்டை முன்னின்று நடத்தியவர்கள் மாணவர்களேயானாலும் அதனைப் பின்னின்று இயக்கியவர்கள் அரசியல் கட்சியில் அழுந்தி மாணவர்களின் இடையில் நம்பத் தகுந்த அளவில் நடமாடிக் கொண்டிருந்த ஓரிருவரே யாவர். இத்தலையீட்டை விரும்பாமையால் மாணவ அமைப்பாளர்களையும் அக்கட்சி இயக்குநர்களையும் கண்டு குறைந்தது மூன்று மணி நேரம் பேசி ஏற்கனவே திட்டமிடப் பெற்றிருந்த சில அமைப்பு முறைகளை மாற்ற வேண்டினேம். ஆனால் திட்டங்களும் தீர்மானங்களும் ஏற்கனவே முடிவு செய்திருந்த முறையிலேயே நடத்தப் பெற்றன. நாம் அவர்களுக்குக் கூறியவற்றுள் இன்றியமையாதன "மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஓர் அரசியல் கட்சிக் கொள்கையிருப்பதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனால் இந்தியெதிர்ப்பு ஓர் அரசியல் கட்சியின் கொள்கையாக மட்டுமில்லாமல் மாணவர்களின் கல்விச் சிக்கலுக்குத் தீர்வுகாண வேண்டியதாகவும் இருப்பதை நாம் எந்தக் கட்சியின் தொடர்பும் இன்றி அரசினர்க்கு எடுத்துரைத்தால்தான் நம் கொள்கைக்கு மதிப்பும் குரலுக்கு வலிவும் இருக்கும். இவ்வாறின்றி ஓர் அரசியல் கட்சியின் கொள்கை வழி நின்று கூறப்பெற்ற தீர்மானங்கள் இவை என்று கருதி அவற்றை அரசினர் புறக்கணிப்பாகக் கருதிக் கொள்ளும்படி நாம் நடந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு நடந்து கொள்வதானல் மாணவர்கள் மாநாட்டுக்கென்று ஒரு தனிப்பட்ட சிறப்பும் இல்லாது போகும். மாநாடும் வெறும் ஆரவாரமாகவே முடியும்" என்பனவாகும்.

இக்கருத்து அவர்களின் அரசியல் வளர்ச்சிக்கு மாணவர் மாநாட்டைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற நிலையை ஒருவாறு தடுத்து நிறுத்துவதுபோல் அமையும் என்று அவர்கள் கருதியதால் புறக்கணிக்கப்பெற்றது. கருத்து புறக்கணிக்கப்படவே அதனைக் கூறிய எம்மையும் அவ்வொட்டாரும் அவர்களின் பின்சென்று பிழைத்தொழுகும் பேதை மாணவர் ஒருசிலரும் புறக்கணிக்கத் தொடங்கினர். ஆளைப் பார்த்துக் கருத்தைக் கேட்கும் அறிவு குறைந்த நம் மக்களின் இத்தகைய செயல்களுக்குக் கவலைப்படாத நாங்கள் மேலும் அங்கு நடப்பனவற்றைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கினோம்.

இவற்றிற் கிடையில் மாநாட்டுக்கு வந்திருந்த கோவைத் தொழில் அறிஞருடனும், பிறருடனும் கலந்து மாநாட்டில் நான் பேசவிரும்பாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் வருந்துவதாகவும் இப்படிப் பட்ட போலி நடவடிக்கைகளால் மொழிக்கோ மக்களுக்கோ எவ்வகைப் பயனும் ஏற்பட்டுவிடாதென்றும் என் கருத்தைக் கூறினேன். ஆனால் அந்த நிலையையும் தங்களுக்கு ஏந்தாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி அங்கிருந்த கட்சியாளர்கள் மாணவர்களை இயக்கிவிடக் கூடும் என்று உய்த்துணர்ந்து எப்படியும் நம் கருத்தை மாநாட்டில் தெரிவித்து விடுவதே சரியென்று அமைந்திருந்தேன். இதற்குள் மாநாட்டில் பேசிய பல்துறைப் பேச்சாளர்களும் இந்தியை நாம் இத்தமிழகத்திற்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டுமானால் பேராயக் கட்சியை மீண்டும் அரியணையில் அமர்த்தக் கூடாதென்றும், எதிர்க்கட்சியான தி. மு. க. வையே ஆட்சியில் அமர்த்தவேண்டு மென்றும், அதற்காக மாணவர்கள் பாடுபட வேண்டுமென்றும் பேசினர். இந்நிலையில் நாம் ஒரு கருத்தை மறந்துவிடக் கூடாது.

பேராயக் கட்சியை ஆட்சியில் இருந்து வீழ்த்த வேண்டும் என்பது வேறு. தி. மு. க. வை ஆட்சியில் அமர்த்த மாணவர்கள் பாடுபடவேண்டுமென்பது வேறு. இந்தித் திணிப்பு ஒழிக்கப்படவேண்டும் என்பதும் வேறு.

இந்தி எதிர்ப்புக் கொள்கை ஒன்று மட்டுமே அரசியல் ஆகாது. நூற்றுக் கணக்கான அரசியல் சிக்கல்களில் அதுவும் ஒன்று. அதுவும் தமிழகத்தையும் அதைப் போன்ற மொழி, இன மானங் கொண்ட மாநிலங்களையும் பொறுத்த மட்டிலுமே இந்தி எதிர்ப்பு என்பது அரசியல் கொள்கைகளில் ஒன்றாக இருக்கின்றது. அதுவும் **1965** சனவரி **26**-ஆம் பக்கலுக்கு முன் இவ்வெதிர்ப்புக் கொள்கை முழு அரசியல் சிக்கலாகக் கருதப்படாமல் இருந்தது. **1938**-லிருந்து **1947** வரை இச்சிக்கல் குமுகாயச் சிக்கலாகவே — மொழிச் சிக்கலாகவே ஒரு மொழி அல்லது இனம் பிறிதொரு மொழி அல்லது இனத்தில் ஊடுருவுகின்றதைத் தடுத்து நிறுத்தும் சிக்கலாகவே இருந்தது.

பேராயக் கட்சி அரசியல் வலிவு பெறு முன்பிருந்தே இச்சிக்கல் இருந்து வருவதால் இச்சிக்கலுக்குப் பேராயக் கட்சி மட்டுமே முழுப் பொறுப்பு என்று கூறிவிட முடியாது. இந்தி நுழைப்பைத் தடுத்து நிறுத்தாத குற்றம் இங்கிருந்த – இருக்கின்ற அரசியல், குமுகாயவியல், மொழியியல் தலைவர்கள் எல்லாருடையதுமாகும் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே இந்தியை எதிர்த்து விரட்டியடிக்கின்ற செயலை முழு வெற்றியோடு செய்கின்ற ஒரு நிலையே அரசியல் அமைப்பின் வெற்றியாகிவிடாது. அல்லது அவ்வாறு செய்து முடிக்கின்ற ஒரு கட்சியே நம்மையாளும் முழுத்தகுதி பெற்றது என்றும் கூறிவிட முடியாது. நூற்றுக் கணக்கான அரசியல் சிக்கல்களில் ஒன்றான இந்தித் திணிப்பை மட்டும் வெற்றிகொள்ளும் ஒருகட்சி மற்ற தொண்ணூற்றுஒன்பது சிக்கல்களை நெருங்குதற்கும் அறுத்துக் கட்டுதற்கும் ஏற்ற திறம் படைத்துத்தானிருக்கும் என்றும் கருதிவிடமுடியாது. நாம் அவ்வாறு கருதிவிடும் பிழை நாம் கொண்ட கட்சி அரசியல் அடிப்படையில் விளைவதாகும்! எனவேதான் நமக்கு மிக இன்றியமையாததாகக் கருதும் ஒன்றினை மட்டும் செய்யத் திறம் படைத்துப் பிறவற்றைப் புறக்கணிக்கின்ற அல்லது அணுகத் திறமையற்ற தனிப்பட்ட ஒரு கட்சியை நம்புதலே நம் அரசியல் அறிவின் தெளிந்த நிலை ஆகிவிடாது. அவ்வாறு இருக்கும் ஒரு கட்சி இந்தியை எதிர்த்து வெற்றிவாகை சூடலாம். பிற அரசியல் சிக்கல்களில் மண்ணைக் கவ்வலாம். அல்லது பெரும்பான்மையான அரசியல் சிக்கல்களில் வெற்றியடையலாம். இந்தி எதிர்ப்பு போன்றவற்றில் முழு அடிமை ஆகிவிடலாம். நம்மைப் பொறுத்த மட்டில் பெரும்பான்மையான கொள்கைகளில் வலிவும் தெளிவும் உள்ள ஒரு கட்சியை அல்லது தனிப்பட்ட ஓர் ஆளை மட்டுந்தான் ஆட்சி மன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும். அக்கட்சி சிக்கறுக்காத கொள்கைகளில் இந்திச் சிக்கலும் ஒன்றாக இருப்பினும் இருக்கலாம். ஆனால் அந்த ஒரு கொள்கைக்காகப் பிற அத்தனைச் சிக்கல்களையும் அறுக்கத் தெரியாத ஒருவரையோ, ஒரு கட்சியையோ தேர்ந்தெடுப்பது நம் அரசியலறிவு மழுக்கத்தையே காட்டுவதாகும்.

இந்த அடிப்படை உண்மைகளை எண்ணியே தமிழரின் அறியாமையே அவர்தம் மொழி வீழ்ச்சிக்கும் தன்மானக் கேட்டிற்கும் பண்பாட்டுச் சிதைவிற்கும் காரணமாகும் என்றும், மாணவர்கள் அவற்றிலிருந்து விடுபட முயற்சி செய்யாமல் அரசியல் கட்சிக் கொள்கைகளில் குருட்டுத்தனமாக ஈடுபடுவது தவறாகும் என்றும் மாநாட்டில் கூறிவிட முடிவு செய்தேன்.

இவற்றிற்கிடையில் ஒருவாறு நம் கட்சி ஈடுபாடற்ற நடுநிலைக் கொள்கை தங்களுக்குக் கேடு விளைவித்து விடலாம் என்று கருதிய

கட்சிச் சார்பான மாணவர் சிலர் மாநாட்டு அமைப்பாளர்களிடம், 'மாநாட்டுக்கு இவரை ஏன் அழைத்தீர்களென்றும், இவர், பாவாணர், அப்பாத்துரையார், இலக்குவனார் முதலியோர் புற நானூற்றுக் காலத்தில் வாழவேண்டியவர்கள் என்றும், தற்கால அரசியல் நடைமுறைகளுக்கு இன்னோர் பயன்பட மாட்டாரென்றும், கூறிக் கசந்துகொண்டதாகவும் கேள்விப் பட்டோம். துடுக்கும் மிடுக்கும் கடுப்பும் கட்சி வெறியும் நிறைந்த மாணவர் சிலர், "எங்கள் தலைவரை எத்தனையோ பேர் முட்டிப் பார்த்துவிட்டனர் என்றும், இவர் எம்மாத்திரம்? என்றும் வாய்ப்பறை கொட்டியதாகவும் கேள்விப் பட்டோம். தலைமையாக நின்ற ஒருசிலர், 'நாங்கள் மனம் வைத்தால் எப்படியெப்படியோ நடந்துவிடும்: எதற்கு வீண் வேலை என்று விட்டுவிட்டோம்' என்று பேசியதாகவும் நடுநிலையான மாணவர்கள் எங்களிடம் வந்து கூறினர். இவையெல்லாம் எங்கள் மனத்தைப் புண்படுத்தினவானாலும் மாநாட்டில் நான் கட்டாயம் பேசியாக வேண்டிய சூழலை உண்டாக்கின. அதன்படியே இரண்டாம் நாள் இடைவேளைக்குப் பின் பேசவும் செய்தேன். நான் கூறிய கருத்துகளில் தமிழகத்தின் மொழிப் போராட்டம் இன்று நேற்று தொடங்கியதன்று என்பதும் ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடர்ந்து நடைபெற்று வருகின்றதென்பதும், அக்கால் வடமொழி வலிந்து திணிக்கப் பெற்றுத் தமிழ் கெட்டதென்பதும் அதன்பின் வேறு பல மொழிகளும் தமிழ் வளர்ச்சியை கெடுத்தனவென்பதும் இன்று இந்தி கெடுக்க வருகின்றதென்பதும், இனி நம் நாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் சமற்கிருதமும கெடுக்குமென்பதும், இப்படியே நாம் இருந்தால் சீனம், உருசியம் முதலிய பிறநாட்டு மொழிகளும் கூட கெடுக்க வருமென்பதும், இவற்றை ஒழித்துக் கட்டுவதற்கு நாம் அடிப்படைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு போரிட வேண்டுமென்பதும், மாணவர்கள் கட்சி சாராத அரசியலில் ஈடுபடுதல் தவறில்லையென்பதும், அப்பொழுதுதான் அவர்கள் கருத்துக்கு வலிவும் மதிப்பும் இருக்குமென்பதும், பிறமொழிகளால் தமிழ் எவ்வாறு கெடும் என்பதும் இப்போராட்ட நிலைக்குக் காரணமான பக்தவத்சலங்கள் ஒழிக்கப்படவேண்டுமென்பதும் இன்றியமையாத கருத்துகளாம். இப்பேச்சில் தி. மு. க. விற்கு ஒப்போலையிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் குறிப்பு இல்லாமற் போகவே, கட்சியைச் சார்ந்த மாணவர்களும் இயக்கிகளும் என்மேல் காழ்த்து நின்றனர். அதன் பின் மாலை நிகழ்ச்சிக்கு வந்த திரு. அண்ணாத்துரையவர்களிடம் என்னைப்பற்றிய செய்தி தெரிவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். எனவே அவர்தம் சொற்பொழிவில் என்னைத் தாக்கிப் பேசும் குறிப்புகள் சில இருந்தன. அவை, "இலவசமாக மேடை கிடைத்து விட்டதால் தமக்கிருக்கும் ஓரளவு சரக்கையும் விற்றுவிட்டுப் போகும் சரக்குக் குறைந்தவனல்லன் நான்... வெறும் மொழியறிவை மட்டும் எடுத்துப் பேசிக்கொண்டிருந்தால் பயனில்லை; இந்த மேடையில் தேவையற்றவர்கள் — மேடை கிடைத்து விட்டதாக எண்ணி மகிழ்கின்ற

வர்கள் — உள்ளே நுழைந்து விட்டனர். புலவர்கள் தமிழைக் காத்துவிட முடியாது. அரசியல் வலிவினுல்தான் இந்தித் திணிப்பை எதிர்க்க முடியும். குடியரசு நாட்டில் எந்தத் தனி ஒருவனும் அரசியலிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது'' — என்பனவாகும். அவருக்கு முன்பேசிய ஒருவர் ''அரசியல் அரைவேக்காட்டுக்காரர்கள் சிலர் இந்தியெதிர்ப்பு அரசியல் சிக்கலாகாது' என்று கூறுவார்கள். அவர்களின் பேச்சுக்கு மாணவர்கள் செவி சாய்க்கமாட்டார்கள்'' என்றும் ஓங்கிப் பேசினுர். இந்நிலையில் நம் அரசியல் கருத்துகளைத் தெளிவாக இங்குக் கூறிவிட வேண்டியுள்ளது.

நான் தனிப்பட்ட எவர் ஒருவரையும் அங்குத் தாக்கியோ மதிப்புக் குறைவாகவோ பேசவில்லை. அவ்வாறிருந்தும் கட்சிப் பற்று கட்சி சாராத உண்மையான அரசியல் கருத்துகளுக்குக்கூட மதிப்பளிக்காமற் செய்துவிடக்கூடியது! என்பதைத் தஞ்சை மாநாட்டின் நடவடிக்கைகள் எனக்கு நன்கு புலப்படுத்தின. நான் அரசியல் ஈடுபாடு வேண்டா என்று எங்கும் கூறவில்லை. கூறவும் மாட்டேன். 'மாந்தன் ஓர் அரசியல் விலங்கு'' (Man is a political animal) என்று அரிசுடாடில் கூறுகிருர். 'மாந்தனுக்கு வயிறும் வாயும் பிறந்த பொழுதே அரசியல் தொடங்கிவிட்டது' என்பர் மார்க்சு. ஆகவே அரசியல் என்பது நமக்கு வேண்டாத கொள்கையன்று. ஆனுல் அரசியல் என்ருலேயே கட்சிகள்தாம் தம் நினைவிற்கு வரும்படி இங்குள்ள மக்கள் தவருகப் பழக்கப்படுத்தப் பட்டிருக்கின்ருர்கள். கட்சியமைப்பே முழுமலர்ச்சியடைந்த அரசியல் அமைப்புக்கு ஏற்றதாகாது. ஒரு கட்சி எத்தனையோ கொள்கைகளில் பிற கட்சிகளுடன் ஒன்றுபடலாம். ஆனுல் கட்சியமைப்பில் அவ்விரண்டு கட்சிகளும் வேறுபட்டவையே. இதைப்போன்ற அடிப்படையான பிழைகளே நம் நாட்டு அரசியலைச் சரிவர இயங்கவிடாமல் தடுத்துக்கொண்டிருப்பது. அரசியல் என்பது 'இங்குள்ள நிலம் எல்லாருக்கும் சொந்தம் — பொது' என்பதாகப் பொருள்படுமானுல், கட்சி என்பது 'அதில் எனக்கு மட்டும் இவ்வளவு நிலம் சொந்தம்' என்று வரம்பு கட்டிக் கொள்ளுவதாகும். கட்சிக் கொள்கைகளால் வரம்பு கட்டிக் கொள்ளுவது என்பது தன் நிலத்தில் சுற்றுச் சுவர் எழுப்புவதற்கொப்பாகும். சுற்றுச்சுவர் எழுப்பிக் கொண்டவன் எவனும் மக்கள் எல்லார்க்கும் எல்லாம் என்னும் உலகப் பொதுமை எண்ணத்திற்கு மாறுபட்டவன் ஆவான். ஒருவர் ஒரு கொள்கையை அமைத்துக் கொள்ளுவதில் பிழையில்லை. ஆனுல் அக்கொள்கையையே முடிவானதாகவும் அதைச் செயற்படுத்துதலே போதும் என்றும் கருதிவிடக் கூடாது நம் கொள்கையைப் போலவே பிறரொருவர் அக்கொள்கையைச் சரியென்று ஏற்றவிடத்து நம்முடன் சேர்ந்து பாடுபடுதற்கும், நம் கொள்கையைத் தவறென்று கண்டு விலகுமிடத்து அவரே தவறு என்று விலக்குதற்கும் கட்சி வரம்புகள் குறுக்கிடுதல் கூடாது. பொதுவுடைமை ஒரு கட்சி என்ற அளவில் இல்லாமல் கொள்கை

என்ற அளவில் உலக முழுவதற்கும் ஏற்றதாகும். ஆனால் கட்சி என்ற அளவில் அஃது அதன் உறுப்பினர்களுக்கே உரியதாகும்.

தமிழகத்தில் பேராயக் கட்சியை வரவேற்பவனே சரியான அரசியல் தெரிந்தவனாகப் பேராயக் கட்சிக்காரர்களும், தி. மு. க. வை வரவேற்பவனே சரியான அரசியல் தெரிந்தவனாகத் தி.மு.க. வினர்களும், இவ்விரண்டிலுமோ பிறவற்றிலுமோ சாராமல் பொதுவுடைமைக் கட்சியில் உறுப்பினன் ஆனவனே சரிவர அரசியலைப் புரிந்தவனாகப் பொதுவுடைமைக் கட்சிக் காரர்களும் பிழைபட நினைக்கின்றனர். இம்மூன்று கட்சிகளிலுமே அரசியல் தெளிவானவர்களும் அரசியல் தெளிவற்றவர்களும் இருக்கலாம் அன்றோ? அவ்வாறு இருப்பது உண்மையாகக் கொள்ளப்படுமானால் அத்தெளிவற்றவர்களையும் தெளிவுள்ளவர்களையும் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் அடைத்து வைத்திருப்பது எவ்வாறு சரியாகும்? ஒரு கட்சிக்காரர்கள் கொள்ளுகின்ற கொள்கைகளில் ஒருசிலவே சிக்கலுக்குரியனவாக இருக்கும். சிக்கலுக்குரிய அந்த ஒரு சிலவற்றுக்காகப் பெரும்பான்மையும் ஒத்துப்போகும் மக்கள் தங்களுக்குள் கட்சி என்ற அடிப்படையில் பிளவுபட நிற்பதும், அந்நிலையையே தெளிந்த அரசியலின் விளைவு என்று கட்சித் தலைவர்கள் கூறிக் கொள்ளுவதும் எவ்வளவு பிழைபட்ட செயல்களாகும். இவ்வாறு பிழைப்பட்ட போக்குடையவர் எங்ஙன் அரசியல் முன்னேற்றம் பெறுதற்கு வாய்ப்பளிக்கப் போகின்றனர்? தெளிவாகச் சொன்னால் நம் நாட்டையும் பண்பாட்டையும் கெடுப்பது இத்தகைய தெளிவற்ற அரசியல் அமைப்புகளே!

கட்சியமைப்பு குடியரசு நாட்டில் அரசியல் பணிகளுக்கு ஏற்றதாக அமையலாம். ஆனால் மக்களைப் பொறுத்த மட்டில் கட்சி அரசியல் சாராத குமுகாய அமைப்பே நாட்டுமக்களை அமைதியாகவும், பண்பட்ட வாழ்க்கை வாழச் செய்யவும் ஏற்றதாகும். அதுவே தமிழன் அமைத்துக்கொண்ட அரசியல் அமைப்பு ஆகும். கட்சி சார்ந்த அரசியல் மக்களிடை ஊடுருவி அவர்களைக் கீழான அரசியல் உணர்ச்சிகளுக்கும் போலிமை வாழ்விற்கும் ஈடுபடுத்துவது, என்று தடுத்து நிறுத்தப் பெறுகின்றதோ அன்றைக்கே இந்நாட்டில் ஒழுங்கான அரசியல் அமைப்பும் அதன் வழி செப்பனிடப் பெற்ற குமுகாய அமைப்பும் ஏற்படும் என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

குமுகாய அமைப்பு, பண்பாட்டியல், வாழ்வியல் சமயங்கள் முதலிய எல்லா அமைப்புகளையும் அரசியல் கொண்டிருந்தாலும் இவை அரசியலினின்று வேறுபட்டவையே! இவற்றில் அரசியல் ஊடுருவல் செய்யும்பொழுது இவற்றின் தனித் தன்மைகள் சிதைந்து, இம்மன் பதையின் மீமிசை மாந்தவியல்பே அழிந்து போகின்றது. சீனாவில்

இத்தகைய அரசியல் ஊடாட்டத்தை மக்களிடையே மிகுதியும் புகுத்தியமையால்தான் சீன நாடே ஓர் அரசியல் குப்பைத் தொட்டியாகிப் போய்விட்டது. இவ்விடத்தில் 'குமுகாயம் அரசியலடிப்படையாகவே வளர முடியுமானாலும் அரசியல் தாண்டிய நோக்கம் உடையது'' என்ற சேம்சு ஆலனின் கூற்று நினைவு கூர்தற்குரியது. அவர் குறிப்பிடுதல் போல் ''உலகை அரசியல் காரர்களே ஆள்கின்றனர் என்றுதான் மேலீடாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்; அரசியல் கடந்த பொருளியல் வல்லுநர்களோ வங்கிகள்தாம் உலகை ஆள்கின்றன என்பர். இவர்களைக் கடந்து குமுகாயத்தை ஆராய்வோர் குமுகாயமும் குமுகாயத்தில் நிலவும் கருத்துகளுமே உலகை ஆள்கின்றன— என்று கூறுவர். ஆனால், உலகுடன் உலகாக இயங்கி அவ்வத்துறையின் பண்பை உலகறியாமலேயே உயர்த்தும் அருளாளர்களே இவ்வுலகை உண்மையில் ஆண்டு கொண்டிருப்பவர்களாவர்''

இந்திய அரசியல் முழுவதும் இந்தி எதிர்ப்புடனோ அல்லது அதைத் திணிக்காமல் அடங்குவதுடனோ முடிவு பெற்றுவிடுவதன்று. நூற்றுக் கணக்கான துறைகளில் இந்திய அரசியல் இன்னும் விழிப்புறவில்லை. காரணம் இவ்வரசியலை அறிந்தவர்களாகவும் நடத்திச் செல்பவர்களாகவும் மக்களுக்கு வந்து வாய்த்தவர்களில் பெரும் பான்மையானவர் அரசியல் பித்தலாட்டக் காரர்களே! அரசியலைக் கவருட்டமாகப் பயன் படுத்தித் தங்கள் வாழ்நாள் முழுவதினும் தாங்கள் பெறுகின்ற வெற்றி தோல்விகளால் மகிழ்வும் துயரமும் காணக்கூடியவர்களே! அரசியல் சிக்கல்களில் இப்படிப்பட்ட போலிகளை இனங் கண்டு கொள்ளுவதும் ஒரு பாடமாகும். முற்றி முதிராத இளமை உணர்வு மிகுந்து அறிவூட்டம் குறைந்த மாணவர்களுக்கும், கள்ளங் கவடறியாத பொதுமக்களுக்கும் இத்தகைய போலியரசியல் காரர்களே மிகக் கவர்ச்சியுள்ளவர்களாகத் தென்படுவர். எனவே தான் இத்தகையோர் அரசியலில் ஈடுபடும் பொழுது போதிய தெளிவும் அறிவும் பெற்றவர்களாக இருத்தல் இன்றியமையாதது என்று நாம் கருதுகின்றோம்.

மக்களரசு முறையையும், மன்னராட்சி முறையையும் இணைத்து நின்று மக்களாட்சி அமைப்பு முறைக்கே புதுவழி காட்டும் இங்கிலாந்தில் கூட கட்சிகள் இருக்கின்றனவே என்றால், அவர்களுக்கு உண்டான அரசியல், குமுகாய, உலகியல் சிக்கல்கள் நமக்குள்ளவற்றைவிட மிகுந்திருப்பதே காரணமாகும் இங்கு நம் நாட்டுச் சிக்கல்களை விட நம் நாட்டுக் கட்சிகளால் ஏற்படும் சிக்கலிலேயே மக்கள் பெரிதும் ஈடுபட்டுக் கிடக்கின்றனர். தென்னாட்டில் உள்ளவர்களுக்கு அரசியல் ஈடுபாடு மிகுந்திருப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக உயர்திரு. அண்ணாத்துரை அவர்கள் அண்மையில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். உண்மை என்னவென்றால் தென்னாட்டில் உள்ளவர்களுக்குத் தெரிகின்ற அரசியல் எல்லாம் கட்சி அரசியலே! அஃதாவது பிறருடைய கட்சிக் கொள்கை

களைவிட தம் கட்சிக் கொள்கைகளே சிறந்தவை என்று வாழ்நாள் முழுவதும் பேசிக் களிப்பதே இவர்கள் தெரிந்துகொண்ட அரசியல் ஆகும். மற்றப்படி நாட்டின் நில அமைப்பின் வேறுபாடுகள், மக்கள் அமைப்பின் வேறுபாடுகள், மொழி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள் முதலியவற்றை உள்ளடக்கிய பெரியதொரு நிலப்பரப்பின் ஆட்சிக்கு உள்ள பொருளியல் வலிவு, வெளிநாட்டு, உள்நாட்டுத் தொடர்பு முறைகள், உலக அரசியலில் நம் நாடு கொண்டுள்ள பங்கு முதலியவற்றைத் தெளிவாக அறிந்து கொண்டா அவர்கள் அரசியலில் பங்கேற்கின்றனர்? இனி இவற்றைத் தெரிந்து கொள்ளும்படியான தேவை இவர்களுக்கு வேண்டியதில்லை; இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அரசியல் எல்லாம், தம்மைச் சுற்றியுள்ள ஒரு குறிப்பிட்ட அரசியல் நிலைகளே என்றால் இவர்கள் அரசியலை உணர்ந்து கொண்டவர்கள் என்று எப்படிக் கூறிப் பெருமிதப்பட்டுவிட முடியும். ஒரு குறிப்பிட்ட அரசியல் நிலைகளைப் புரிந்து கொள்வதே இவர்களுக்குப் போதுமானது என்றால் இந்திய அரசியல், உலக அரசியல் இவற்றை ஓரளவு தெரிந்த அரசியலறிஞர்கள் போகும் போக்குக்கு இவர்கள் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதியிருக்கின்றது ?

இங்கு ஒரு மாநிலத்தின் எல்லை சரிவர அமையவில்லை என்பதை எடுத்துப் பேச ஒரு கட்சி; உழவர்களைப் பற்றி அரசு புறக்கணிப்பாக இருக்கின்றது என்பதற்கு ஒரு கட்சி; தம் தம் இனங்களையும் சாதி குலங்களையும் சரிவர அரசு பேணவில்லை என்பதற்கு ஒரு கட்சி; நாம் தமிழர்(!) என்பதற்காக ஒரு கட்சி; ஒரு குறிப்பிட்ட இனத்தின் மிகுந்த ஊடுருவல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒரு கட்சி; இப்படி ஓரிரு கொள்கைகளுக்காகப் பலப்பல கட்சிகள்! இத்தகைய கட்சியமைப்புகள் இருந்தால்தான் குடியரசு முறை சரிவர இயங்குமா? இல்லாவிட்டால் குடியரசு முறையே தோல்வியுற்றுப் போகுமா? இத்தனை அரசியல் கட்சிக்காரர்களாலும் மக்களுக்கு இதுநாள்வரை மிஞ்சியவை குழப்பங்களும் பூசல்களுமே அன்றி ஓர் எள்ளின் மூக்கத் துணையும் நன்மை விளைந்ததென்று கூற முடியுமா? ஒரு கட்சிக்காரர் மக்களிடையில் வந்து நேற்றைக்குச் சரியென்று கூறிவிட்டுப் போன ஒரு கருத்தை, இன்னொரு கட்சிக்காரர் இன்றைக்கு வந்து அதே மக்களிடை தப்பு என்று வானளாவப் பேசுவார். மூன்றும் நாள் முன்னைய இருவரும் சொன்னது பிழையென்

றும் தாம் சொல்வதே முழுச் சரியென்றும் ஒருவர் வந்து முழங்குவார். நான்காம் நாள் இன்னொருவர் வந்து இவர்கள் எல்லாரும் சொல்வதில் உண்மையில்லை. உருசியாவைப் பாருங்கள்; அமெரிக்காவைப் பாருங்கள்; சப்பானைப் பாருங்கள்; அங்கெல்லாம் அரசியல் அமைப்பு இப்படியில்லை; அதனால்தான் அவர்களெல்லாரும் வான மண்டலம் ஏறி நிலாவைத் தொட்டுவிட்டார்கள் என்று தொண்டை வரளக் கத்துவார். இப்படி எல்லாரும் சொல்லும் வெந்தனவும் வேகாதனவும் ஆன கருத்து களைப் பலரும் பலவகையாகத் தின்று வயிற்று வலியும், வாய்க் குமட்டலும், கொண்டு அல்லற்படுகின்றனர் மக்கள். இதுதான் இவர்கள் பேசும் அரசியல் தெளிவா? இப்படிப்பட்ட அரசியல் இருப்பதைவிட ஒழிந்து போவதே மேலில்லையா ?

அரசியலுக்கு விளையாட்டாக ஓர் இலக்கணம் கூறப்பெறுவ துண்டு. "அரசியல் என்பது பணக்காரர்களிடத்திலிருந்து ஏழை களையும், ஏழைகளிடத்திலிருந்து பணக்காரர்களையும் காப்பதாகக் கூறிக்கொண்டு முன்னவரிடம் பணத்தையும் பின்னவரிடம் ஒப்போலை களையும் பெற்றுக்கொள்ளுகின்ற ஒரு கலை" என்பதே அது. இக் கலையை எவ்வளவுக் கெவ்வளவு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி அரசியலில் ஈடுபடுபவர்களே இந்நாட்டில் பெருமள வில் இருக்கின்றனர். உண்மையான அரசியல் தலைவர்களும் உண்மை யான அரசியல் கட்சிகளும் இவ்விந்திய நாட்டில் ஒருசிலரும் ஓரிரண் டுமே ஆகும். காலக் கோளாறுகளாலும் மக்களின் அறியாமையாலும் இவர்களும் இக்கட்சிகளும் தலையெடுத்தும் பயனற்றுப் போகும் ஒரு போகூழான நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கூறு வதற்கு நமக்கு எந்த மேடையும் தேவையில்லை. திரு. அண்ணாத் துரை அவர்கள் குறிப்பிடுவது போல் தஞ்சாவூர் இந்தியெதிர்ப்பு மாநாட்டு மேடை நமக்கு இலவசமாகக் கிடைத்த மேடையுமில்லை. அவ்வாறு இலவசமாகக் கிடைக்கும் மேடைகளிலெல்லாம் ஏறிப் பேசும் அளவிற்கு நம் கருத்து வலிவிழந்த கருத்தும் அன்று. வெறும் மொழி யறிவை மட்டுமே எடுத்துப் பேசிக் கொண்டிருப்பவர்களும் நாம் அல்லர். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக வெளி வந்துகொண்டிருக் கும் தென்மொழி இதழ்களையும், இவர்கள் நடத்திக்கொண்டு வருகின்ற இதழ்களையும் புரட்டிப் பார்த்தால் ஓர் உண்மை பளிச்செனத் தெரியும். மொழியைப் பற்றியோ, பிற அரசியல் பற்றியோ மக்களுக்கு வேண் டிய பிற அறிவுத் துறைச் செய்திகளைப்பற்றியோ தென்மொழி பேசி

வந்த செய்திப் பரப்பும், தன்மையும் எவ்வள வென்றும் இவர்களின் இதழ்கள் பேசிவந்த செய்திப் பரப்பும் தன்மையும் எவ்வளவென்றும் நன்கு புலப்படும். இவற்றை நாம் எதற்காக இங்குக் குறிப்பிட வேண்டி வந்ததென்றால், அரசியல் அரைவேக்காட்டுக் காரர்கள் என்று நம்மைக் குறிப்பிடும் இவர்களின் ஏளனக் குறிப்பின் அடியில் கிடக் கும் மணல் திட்டுகள் எவ்வளவென்று மக்களுக்கு அறிவிக்க வேண் டியே! இதுவரை தென்மொழி இதுபோன்ற நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டுத் தன் நிலையைத் தாழ்த்திக் கொண்டதில்லை. இப்பொழுதும் தன் நிலையைத் தாழ்த்திக் கொள்ளுவதற்காக இதனைக் குறிப்பிடவும் இல்லை. நம் நாட்டின் அரசியல் நடவடிக்கைகளின் தக்கை நிலைகள் எவ்வளவில் வருங்காலத் தமிழர்களை வலுவற்றவர் களாகச் செய்துகொண்டிருக்கின்றன என்ற கவலையே இதற்குக் காரணம்.

இனி, ஒருவரோ, ஒரு கட்சியோ இந்தியை எதிர்ப்பதாலேயே தமிழைக் காப்பாற்றுகின்றேன் என்று வாயளவில் கூறுகின்ற தாலேயே அவர்கள் அரசியல் தெளிவும் நம்பிக்கையும் வாய்ந்தவர்கள் ஆகிவிட மாட்டார்கள். குறிப்பாக தி. மு. க வில் உள்ள தலைவர்கள் ஒரு சிலருக்கிருக்கின்ற அரசியல் தெளிவும் கொள்கை ஈடுபாடும் அவரைப் பின்பற்றும் எல்லாருக்கும் இருப்பனவாகவும், நிலைப்புடை யனவாகவும் கூறிவிட முடியாது. அரசியல் கொள்கையால் இழந்த வலிவை மொழியியற் கொள்கையால் திரும்பப் பெற இவர்கள் முயற்சி செய்யலாம். தமிழகத்தில் இந்தித் திணிப்பே ஏற்பட்டிருக்கவில்லை யானால் தி. மு. க. தன் நிலையை இவ்வளவு வலிமைப்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பே இருந்திருக்காது என்று கருதவும் இடமுண்டு.

இந்தியை மிக வலிவாக எதிர்க்கும் நம் தி. மு. க. அன்பர்கள் தமிழ்க் காப்பில் அவ்வளவு அக்கறை காட்டாமலிருப்பதே நம்மை வருந்தச் செய்கின்றது. கடந்தகால இக்கட்சியின் வரலாற்றில் மேடைத் தமிழின் வளர்ச்சிக்கும் சமற்கிருத விலக்கலுக்கும் ஓரளவு இடமுண்டு என்றாலும், சமற்கிருதமும் பிறமொழிச் சொற்களும் கல வாத தூய தமிழ் வளர்ப்பதில் இவர்கள் நடத்துகின்ற தாளிகைகளும் நாளிதழ்களும் எழுதுகின்ற சிறு சிறு நூற்களும் கவனம் செலுத்துவ தில்லை. தமிழ் தூய்மை எய்துவதன் விளைவாகத்தான் தாய் மொழிப் பற்று வலுப்பெறும் என்பதையும், அதனடிப்படையில்தான் இந்தி யெதிர்ப்பும் பிறமொழித் திணிப்புத் தவிர்ப்பும் வெற்றி பெறும் என்

பதையும் ஒப்புக் கொள்ளுவதில்லை. திரு. காமராசர் பேசுவதுதான் தமிழ் என்று சிலர் கதைப்பதைப் போல் இவர்கள் பேசுவதும் எழுதுவதுந்தான் தூய தமிழ் என்பதாகவும் நாம் எழுதி வருவது புறநானூற்றுக் காலத்தமிழ் என்பதாகவும் அது தேவையில்லை என்பதாகவும் இவர்கள் கருதுவதாகத் தெரிய வருகின்றது. திரு. அண்ணாத்துரை அவர்களும் அவரைச் சார்ந்த கழகத்தவரும் அரசினர் என்ற சொல்லுக்கு மாறாகச் 'சர்க்கார் சர்க்கார்' என்றே இன்னும் குறிப்பிட்டு வருகின்றனர். இவர்களின் நடையில் ஆரவார மிக்க தமிழும் அதற்கெனக் கையாளப் பெறும் பிறமொழிக் கலப்புமே தமிழுக்கு நிலையான கேட்டைச் செய்துவிடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. வடநாட்டிலிருந்து விந்தியத்தைத் தாண்டித் தென்னகம் நுழைந்து அதன்பின் தமிழகத்திற்குள் புகுந்து இங்குள்ள மொழியையும் பண்பாட்டையும் இந்தி மொழி கெடுத்துவிடும் என்று கவலைப் படுவதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள், இங்கிருந்து கொண்டே அதைவிட மேலாக அறிந்தோ அறியாமலோ தமிழில் பிற மொழிக் கலப்புச் செய்து அதன் தனித் தன்மையைக் கெடுத்து வருவதைப் பற்றிக் கவலைப் பட்டதாகவோ, தவிர்க்க முயற்சி செய்வதாகவோ தெரியவில்லை. இந்நிலை மிகவும் இரங்கத் தக்கதாகும். திரு. அண்ணாத்துரை அவர்கள் எழுதுகின்ற உரை நடையில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காடு கலப்புத் தமிழே! இந்நிலை தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதை இவர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. இந்தியைத் தடுத்து நிறுத்துவதில் இவர்கள் காட்டும் அக்கறையை ஏற்கனவே தமிழ் மொழியில் கலந்து நிற்கின்ற சமற்கிருதத்தினின்று தமிழைக் காப்பதிலோ, வளர்ப்பதிலோ காட்டுவதாகத் தெரியவில்லை. இந்தியைத் தடுத்து நிறுத்துவது அரசியல் முயற்சி என்றால் தமிழ் மொழியைக் காப்பது தமிழ் மொழியறிஞர் வேலையாகும் என்பதை இவர்கள் ஒப்புக் கொள்ளுவதாகவும், அவர்களுக்குத் துணை நிற்பதாகவும் தெரியவில்லை. பக்தவத்சலமும் காமராசும் தமிழ் நலம் விரும்பாத பிறரும் தமிழ் அறிஞர்களைப் புறக்கணிப்பது போலவே இவர்களும் புறக்கணித்து வருவது வருந்தத் தக்கதும் கவலைப்படத் தக்கதுமாகும்.

பிறமொழிக் கலப்பையும் தெளிவில்லாத குழப்பமான ஆரவாரச் சொல்லடுக்குப் போலி உரை நடையினையும் விடாப்பிடியாகக் கைக்கொண்டு நாள்தோறும் எழுதியும் பேசியும் வரும் இவர்கள் எந்த

முறையினால் தமிழ்க் காப்பையும் தமிழ் வளர்ச்சியையும் செய்துவிட லாம் என்று கருதிக் கொண்டிருக்கின்றனரோ நாம் அறியோம்.

இவர்களுக்கு அரசியல் துணை போகும் திரு. இராசாசி அவர் களும் அவர்தம் கூட்டமும் தமிழை மறைமுகமாகக் கெடுத்துப் பேச்சு வழக்கற்ற சமற்கிருத மொழியை நடைமுறைக்குக் கொண்டுவரப் பாடு படுவதைப் பற்றிக் கவலைப்படாத இவர்கள், இந்தித் திணிப்பால் மட்டும் தமிழ் கெட்டுவிடும் என்பதை எவ்வகையில் விளக்குகின்றார்கள் என் பதை நம்மால் அறியமுடியவில்லை. 1937–இல் திரு. இராசாசி அவர்கள் இந்தியை ஆட்சி மொழியாகவும் கட்டாயப் பாடமாகவும் கொண்டுவந்ததுமன்றி அக்கால் இலயோலாக் கல்லூரிக் கூட்டம் ஒன்றில் "சமற்கிருதத்தைப் படிப்பதற்குத்தான் இந்தியைப் புகுத்துகின்றேன்" என்று பேசினார். பணம் இல்லை என்று 1938-இல் ஏறத்தாழ 2500 பள்ளிக்கூடங்களை மூடிய அவர், சென்னையில் ஏறத்தாழப் பன்னிரண்டு இலக்க உருபாச் செல வில் சமற்கிருத கல்லூரி ஒன்றை அக்கால் கட்டி முடித்ததிலிருந்து இவரின் அரசியல் சூழ்ச்சி வெள்ளிடை மலை. இத்தகையாரின் துணை யோடு இந்தியை எதிர்க்கலாமே யொழியத் தமிழைக் காத்துவிடல் எவ் வாற்றானும் முடியாது. இனித் தமிழைக் காவாது விடுவதாயின் இந்தியை நாம் ஏன் எதிர்க்க வேண்டும்? இப்பொழுது புகுத்தப்படு கின்ற இந்தியைக்கூட அவர்கள் 'சமஸ்கிருத-நிஷ்ட பரிஷ்கிருத, பரி மார்ஜித ஷூத்த ஹிந்தி' (அதாவது சமற்கிருத சொற்களைக்கொண்டு தூய்மைப் படுத்தப்பட்ட தூய இந்தி) என்றன்றோ சொல்லுகின்றனர். இந்நிலையில் இந்தியை யொழித்துவிட்டுச் சமற்கிருதத்தை இந்தியா முழுதும் பரப்புவதே அவர்கள் முழு முயற்சியும் உள்நோக்கமுமாக இருக்க, அவர்தம் துணை நமக்குத் தமிழைக் காப்பதற்கு எவ்வாறு பயன்படும்? இவற்றைவிட்டு அரசியல் காரணங்களுக்காக மட்டுமே நாம் இந்தியை எதிர்ப்பது வீணனவேலை என்பது சொல்லாமலே விளங்கும்.

இனி, பேராயக் கட்சியால் நமக்கும் மொழிக்கும் ஏற்பட்ட, ஏற் பட்டு வருகின்ற தொல்லைகளை நாம் இல்லை என்று மறுத்தல் முடி யாது. அவற்றுடன் அரசியல் சார்பில்ஏற்பட்டுள்ள பொருளியல் நலி வும் அதன் அடிப்படையாக எழுந்துள்ள விலைவாசி ஏற்றம், வாழ்க்கை நலக்குறைவு, வாணிகச் சீர்கேடு, மக்கள் தொகை மிகுதல் முதலிய குமுகாயச் சிக்கல்களும் தமிழகத்திற்கு மட்டுமன்று, இந்தியா முழு

மைக்கும் பொதுவானவையே! அவற்றைச் சீர்படுத்துவது எந்த ஒரு மாநில அரசுக்கும் தனிப்பட்ட நிலையில் இயலாது. இந்நிலையில் நாம் அவற்றையெல்லாம் ஒருங்கே ஒழித்துக் கட்டி விடுவோம் என்பது வெறும் சொல்லழகும் ஆரவாரமும் கொண்டதாகவே முடியும். இவற்றை எந்த ஒரு தனிக்கட்சியும் ஒழித்துவிட முடியாது. காரணம் இங்குள்ள அரசினரால் மட்டும் இவ்வியலாமைகள் ஏற்பட்டுவிடவில்லை. இங்குள்ள மக்களும் இவற்றிற்குக் காரணமாவார். இவர்கள் இக்கால் உடலுழைப்பை இழிவென்று கருதக்கூடிய ஒரு மேம்போக்கான நிலையில் இருந்து வருபவர்கள்; வேளாண்மையைப் புறக்கணிப்பவர்கள். நகரங்களில் குடியேறுவதும், அங்குள்ள புதிது புதிதான செயற்கை நலன்களைத் துய்ப்பதுந்தாம் நாகரிகம் – முன்னேற்றம் என்று கருதுபவர்கள். இங்கு அரசியல் கட்சித் தலைவர்களும் ஏராளம்! அவர்களைப் பின்பற்றும் கட்சி ஊழியர்களும் ஏராளம். அவர்களில் பெரும்பாலோர் தம் தம் கட்சிகளின் முன்னேற்றத்திற்கு உழைப்பதும், அத்துறையில் வரும் வருவாயைப் பெற்று வாழ்க்கை நடத்துவதுமே போதுமென்றிருப்பவர்கள். இத்தகைய மக்களிடையில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டால் மட்டும் போதாது. உண்மையான நாட்டுப்பற்றும், நாட்டு முன்னேற்றத்தில் அக்கறையும் உழைப்பூக்கமும் ஏற்படல் வேண்டும்.

இத்தகைய குழப்பமான சூழலில் நாமும் குழம்பிய அரசியலைப் பேசிக் கொண்டிருப்பது சரியன்று. இவற்றிற்கெல்லாம் ஒரே விடிவு தமிழகம் மொழிவழித் தன்னாட்சி பெற்று விடுதலை அடைவதே. இதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டு நாம் முயற்சி செய்யாவிடில் நம் மொழி மானமும் பண்பாட்டுச் சிறப்பும் அரசியல் சீர்திருத்தங்களும் காற்றில் பறப்பது உறுதி. இதையறிந்து செயலாற்றுகின்ற கட்சியாலோ தலைவராலோதான் தமிழகத்திற்கு விடிவு ஏற்படப் போகின்றது என்பது அழிக்க முடியாத உண்மை!

– பெருஞ்சித்திரன்.

உறுப்பினர்கள் கவனிக்க.

பணம் விடுக்கும் பொழுது உறுப்பினர்கள் தங்களின் உறுப்பினர் எண்களைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றேம். முகவரி மாற்றஞ் செய்ய விரும்புவோர் தம் புதிய முகவரியோடு, பழைய முகவரியையும் குறிப்பிட வேண்டுகின்றேம். – அமைச்சர்.

ஆட்பட்டிருப்பது வெட்கம்!

— பாவேந்தர் பாரதிதாசன் —

மிடிமையே கொடுக்கும் குடிமையே கெடுக்கும்
அடிமை வாழ்வும் ஒரு வாழ்வா ? — நம்
கொடிய தளை அறுக்க உரிமைக் கொடிபறக்க
கூடிப் படை எடுத்தல் தாழ்வா ?

படிமன்னர் தொழும் மூன்று முடிமன்னர் வழிவந்தோம்
பழிமன்ன வாழ்ந்திட லாமா ? — நாம்
தொடுத்தது போர் ! பகை தொலைந்தது பார் என்று
சொல்லிட இரண்டு நாள் ஆமா ?

ஒருகுடி ஓரினம் ! ஒருமொழி கொண்டவர்
ஒன்றுபட் டார் என்ற பேச்சு — நேர்
திருவி லாப்பகைவர் செவியினில் வீழட்டும்
தீர்ந்து போகும் அவர் மூச்சு.

உருவற்றுப் போகட்டும் தமிழினம் என்றென்றே
ஓயா துழைக்கும்ஒரு கூட்டம் — அதன்
கருவற்றுப் போம்படி செய்வோம் நமக்குள்ள
கைகள் எட்டுக்கோடி ஈட்டி.

ஆளாக வந்தவர் ஆள்வதும் ஆண்டவர்
ஆட்பட் டிருப்பதும் வெட்கம் — மறத்
தோளாய் இருந்தவை தோலா யினஎன்று
சொன்னால்இவ் வையம் சி ரிக்கும்.

வாழ்க்கையி லோர்சுவை, வையத்தி லோர்புகழ் !
வாரி ரோதமிழ்ச்சிங் கங்காள்! — வெந்
தீக்காட்டில் வாழுகின்ற செந்தமிழ் நாட்டன்னை
மீட்க நமையழைக் கின்றாள் !

வீழ்ச்சி அறிந்ததில்லை வேங்கைக ளேஎழுவீர்
வீரம் நமைப்பிரிந்த தில்லை — நம்
தாய்க்கா விலங்கு ? தமிழ்க்கா துயரமிங்கு ?
தாக்குவீர்! தீர்ந்தது தொல்லை !

தமிழா விழித்தெழு!

பிராமணர் தமிழரையும், திரவிடரையும் போல இந்தியப் பழங்குடி மக்களல்லர். அவர் கிரேக்க நாட்டையடுத்த மேலை ஆசியாவினின்று பாரசீக வழியாக இந்தியாவிற்குள் புகுந்தவர். அவர் முதன் முதலாகக் குடியேறிய சிந்துவெளி நாடும் அவர்க்கு தொன்றுதொட்டு உரியதன்று; அது முகஞ்சொதரோ-அரப்பா நாகரிகத்தை வளர்த்த முதுபழம் திரவிட மக்களது.

ஆரியர் சிறுபான்மையராய் இருந்தமையான், இந்தியாவிற் குடியேறிய உடனேயே மாபெரும்பான்மையரான பழம் திரவிட மக்களுடன் கலந்து நாளடைவில் தம் முன்னோர் மொழியை மறந்துவிட்டனர். அதனால் அவர் எந்த மாநிலத்தில் குடியேறி வாழ்கின்றனரோ அந்த மாநில மொழியையே தம் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். ஆயினும், தம் தாய் மொழியிற் சற்றும் பற்றின்றி தம் முன்னோர் மொழியின் கலவைத் திரிபாகிய வேதமொழியையும், அதற்குப் பிற்பட்ட அரைச் சேர்க்கையான இலக்கிய நடை வழக்காகிய சமற்கிருதத்தையுமே இன்றும் கண்ணும் கருத்துமாகப் பேணிவருகின்றனர். தம் தாய் மொழிகளானத் திரவிட மொழிகளை, இழிந்தோர் மொழியெனப் பழிக்கவுஞ் செய்கின்றனர்.

தமிழ்த் தெய்வமென்று சிலரால் போற்றப்பெறும் காலஞ்சென்ற தென்கலைச் செல்வர், பெரும் பேராசிரியர், பண்டாரகர், உ. வே. சாமிநாதர் அவர்களும் தம் வாழ்நாள் முழுதும் தமிழைக் கற்று மாபெரும் புலவராகித் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றி, பல அரும்பெருந் தொன்னூல்களை வெளியிட்டுச் சிறந்த தொண்டாற்றியும், தமிழ்ப் பற்றுக் கொள்ளாதது மிக மிக வருந்தத் தக்கதாம். தவத்திரு அழகரடிகளின் மாமனாரும் சென்னை வாணருமாகிய காலஞ்சென்ற திருவாளர் தணிகமணியார் (எம்.ஏ.) ஒருமுறை பர். சாமிநாதர் அவர்களிடம் சென்று, “ஐயா! நேற்றுத் தாங்கள் ஆற்றிய சொற்பொழிவு மிக நன்றாயிருந்தது”. என்று சொல்ல, அப்பண்டாரகர் உடனே சீறி விழுந்து, “என்ன ஐயா நீங்கள் கூடச் சுயமரியாதைக்காரராகி விட்

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

டீர்கள்! உபநியாசம் என்றல்லவா சொல்லவேண்டும்! சொற்பொழிவு என்கிறீர்களே! இப்புதுச் சொல்லை எங்கே கற்றுக் கொண்டீர்கள்?'' எனக் கழறினராம். மற்றொருமுறை பண்டாரகரின் பழைய மாண வரும், குடந்தைப் பொன் வணிகருமான திரு. ப. தி. சொ. குமாரசாமி அவர்கள் சென்னை வந்து பண்டாரகரைக் கண்டு ''ஐயா நலமாயிருக் கிறீர்களா?'' என்று அன்புடனும், ஆர்வத்துடனும் வினவ பண்டார கர் கடும்புலி போல் பாய்ந்து, ''என்ன உங்களுக்கு சமஸ்கிருதத்தின் மேல் இவ்வளவு துவேஷம்? க்ஷேமம் என்று சொல்லக்கூடாதா? ஏன் நலமென்று வழக்கற்ற சொல்லைப் பயன் படுத்துகிறீர்கள்?'' என்று சினந்து விழுந்தாராம்.

சென்ற ஆண்டு திரு. காஞ்சி காமகோடி பீட சங்கராச்சாரியா ரவர்கள் ''குறளை சென்றோதோம்'' என்னும் ஆண்டாள் கூற்றிற்கு ''குறளைச் சென்றோதோம்'' என்று திரித்து ஓரிடத்திற் பொருள் கூறி யது பற்றி ஆட்சிமொழிக் காவலர் திரு. கி. இராமலிங்கனார் (எம்.ஏ.) வினவச் சென்றிருந்தபோது, ஆச்சாரியாரவர்கள் (தமிழறிந்திருந்தும்) வடமொழியில் விடை இறுக்க அதை அவர்களது அணுக்கத் துணை வர் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினராம். அதன்பின், ஆட்சி மொழிக் காவலர், ''ஐயா! அடிகளுக்குத் தமிழ் நன்றாகத் தெரியுமே! அங்ஙனமிருந்தும் ஏன் வடமொழியில் விடை இறுக்க வேண்டும்?'' என வினவ, அணுக்கத் துணைவர், ''ஆச்சாரியார் சுவாமிகள் பூஜை வேளையில் நீச பாஷையில் பேசுவதில்லை,'' என மறுமொழி தந்தன ராம்!

தமிழ் மக்காள்! தமிழ் மாணவர்காள்! தமிழ்ப் புலவர்காள்! பார்த்தீர்களா தவத்திரு. சங்கராச்சாரியாரவர்கள் கடுங்கூற்றை! தமிழ் இழிந்தோர் மொழியாம்! ஆங்கிலக் கல்வியும் மொழியாராய்ச்சியும் மிக்க இவ்விருபதாவது நூற்றாண்டிலும் தமிழுக்கு இத்துணை இழிப்பும், பழிப்பும் ஏற்படுமாயின், வடமொழி தேவ மொழியென்றும், பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்)' என்றும் முற்றும் நம்பப்பட்ட பண்டைக்காலத் தில் இவை எத்துணை மிக்கு இருந்திருத்தல் வேண்டும் என்பதை உய்த்துணர்ந்து கொள்க.

உண்மையில் தேவமொழி தமிழே! இழிமொழி வடமொழியே! இதை என் 'The Primary Classical Language of the World' என்னும் ஆங்கில நூலிலும், 'வடமொழி வரலாறு' என்னும் தமிழ் நூலிலும் கண்டு கொள்க.

*

பாரதிதாசன் பாத்திறம்

பாவலன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய இன்றியமையா நுண்ணறிவுத் திறன்களில் நுண்ணோக்கு, கற்பனைத் திறன் இவற்றிற்கு அடுத்தபடியாக உள்ளது உவமைத் திறன் ஆகும். உவமையாலேயே பாவலன் தான் நினைத்த கருத்தைப் பிறர்க்கு எளிதே உணர்த்திக் காட்டுவானாதலின், இவ்வுவமையை ஒருவன் கையாளும் திறமையைப் பொறுத்தே அவன் பாட்டுத்திறன் அளவிடப் பெறுகின்றது. தான் கண்டு காட்டப்பெறும் பொருள் என்ன அமைப்புடையது என்பதைக் கூறுமிடத்து அவன் நுண்ணோக்கும், அப்பொருளைத் தான் கண்ட அளவில் என்ன உணர்வெழுச்சி தன் உள்ளத்தே எழுந்தது என்பதைக் கூறுமிடத்து அவன் கற்பனைத்திறனும், அப்பொருளும் அதனைக் கண்ட உணர்வும் எவை போன்றன என்பதைக் கூறுங்கால் அவன் உவமைத் திறனும் வெளிப்படுவனவாகும். நுண்ணோக்கும் கற்பனைத் திறனும் பாவலன் ஒருவனுக்கு உள் நிகழ்ச்சிகளாக அமைந்து அவன் தனக்கே இன்பம் சேர்க்க வல்லன. உவமைத் திறனோ அவன் உள் நிகழ்ச்சிகளையும் அவை வழிச் சுரந்து ஊறும் உள்ளுணர்வுகளையும் வெளிப்படுத்தும் வடிகாலாக நின்று பிறர்க்கும் பாய்ந்து இன்பமூட்ட வல்லது. தான் கண்டுணர்ந்ததைப் பிறர்க்கு உணர்த்த வேண்டிய கடப்பாடு அவனுக்கு இயற்கையிலேயே உளதாகலின் அக்கடப்பாடு என்னும் தாய் பெற்ற செல்வியாக உவமைத் திறனைக் கூறலாம். தலைவனோ தலைவியோ ஒருவர்பால் ஒருவர் உள, மெய் உறழ்ச்சியால் பெற்ற இன்பம் பிறரிடம் சொல்ல அரியதாகலின் அஃது இத்தகைத்து என உலகியலில் எளிதே அறிந்து கொள்ளும் பிற நிகழ்ச்சிகளில் ஒன்றின் மேல் வைத்துப் பிறர்க்குக் கூறுவதைப் போன்றதாகும் அது. பணித்த மொழி கூறும் பாவை ஒருத்தியின் தூய வெள்ளிய எயிறுகளிடை ஊறிய நீரின் தன்மையைப் பிறர்க்கு அறிவிக்க வந்த தலைவன், அதனைப் பிறர்க்குக் காட்சியாலோ வினையாலோ உணர்த்துதல் அரியதாகலின், புற நிகழ்ச்சிகளில் ஒன்றாகிய பாலும் தேனும் கலந்து பருகிய தன்மையைப் போன்றது என்பதன் மேல்வைத்துக் கூறுவதாக வள்ளுவர் கூறுவர்.

இனி அகவுணர்வுகளைப் புறவுணர்வுகளாக்கப் பயன்படும் உவமை எவ்வளவில் கையாளப் பெறுகின்றதோ அவ்வளவால் பாவலன் ஒருவனின் நுண்ணோக்கும் கற்பனைத் திறனும் இன்னும் பிற நுண்ணியல்பு

களும் நமக்கு எளிதே புலப்படுகின்றன. நுண்ணோக்கு விழியகற்சியையும், கற்பனைத்திறன் அறிவகற்சியையும் புலப்படுத்துவன போல் உவமைத்திறன் பாவலன் ஒருவன் மனவகற்சியைப் புலப்படுத்தும். உள்ளம் விரிந்த பரப்புடையதாக இருந்தால்தான் அப்பரப்பில் அகப்படும் பல்லாயிரக் கணக்கான பொருள்களில் தக்கதான ஒன்றை உவமையாகப் பிறர்க்குக் காட்டுதல் எளிதாகும். பரப்பு குறைந்ததாக இருப்பின் அதற்குள்ளடங்கும் பொருட்களின் எண்ணிக்கையும் குறைந்தாக விருக்குமாகையால், கண்ட பொருளுக்கொப்பான ஒன்றைக் காணுவதும் காட்டுவதும் அரிதாக விருக்கும். சிற்சிலகால் ஒருசில தன்மைகளே பொருந்தும்படியான ஒப்புமைப் பொருள்களையே காட்டவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுப்போகும்; எனவே உவமைத் திறன் ஒருவனுக்கு மனவிரிவால் துலங்கப் பெறுவதாகும்.

இவ்வுவமையாலேயே பாட்டும் பாட்டின் கருத்தும் அழகுபடுத்தப் பெறுமாகையால் இதனைப் பாட்டிற்கு அணி என்று கூறினர். கழகக் காலத்தில் இவ்வுவமை ஒன்றே அணியாக இருந்தது. ஆனால் பிற்காலத்து அணிகள் பலவற்றுள் இவ்வுவமையும் ஒன்றானது. இத்தலைகீழ் மாற்றம் ஆரியத் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த ஆரவார அமைப்பாகும். மேனாட்டாரின் தொடர்பால் பாவையர் முகங்களும் இதழ்களும் உகிர்களும் நச்சுக் குழம்பால் சிவந்து தோன்றுதல்போல் தேவையற்ற இவ்வணி ஆரவாரங்கள் நூற்றுக்கு மேற்பட்டனவாகப் பிற்காலப் போலி இலக்கியங்களில் மலிந்து கிடக்கின்றன. ஆனால் அவ்வணிகள் எல்லாம் இவ்வுவமை யொன்றினையே அடியொட்டிக் கிடக்கின்றன.

பாவலனின் உள்ளத்தே கிளர்ந்தெழும் பாட்டுணர்வு பல்லாயிரம் எண்ணக் கால்களைக் கொண்டது. அக்கால்களின் நுனி ஒவ்வொன்றும் இவ்வுலகெங்கணும் பரந்து பட்டுக் கிடக்கும் இயற்கைப் பொருள்களின் மேலெல்லாம் ஊன்றிக் கிடப்பது. பாவலனின் குறுகுறுப்பான மின்னுணர்வுக் கேற்ப அவ்வெண்ணக் கால்கள் செயல்படுவன. விரிந்து சிறகார்ந்து கிடக்கும் இப்புடவியின் எம்மருங்கும் ஓடி அங்கிருக்கும் உணர்வு ஊறல்களை யெல்லாம் பாவலனுக்கு அறிவிக்கும் உணர்வுக் கண்களாக அவை விளங்குகின்றன. எனவேதான் ஓர் உண்மைப் பாவலன் இயற்கையின் அறிவிப்பாளன் எனப்படுகின்றான். இயற்கையின் வெளிப்பாட்டு நிகழ்வுகளில் காலமும் ஒன்றாகையால்

அவன் முக்காலத்தையும் உணர்கின்றான். மாந்தர் எல்லார்க்கும் கொடுக்கப் பெற்றிருக்கும் இவ்வுணர்வு பிறரிடத்து நீர்மேல் நிழல் போல் அரிதே புலப்படுவது. பாவலனிடத்து மட்டும் இவ்வுணர்வு நிலமேல் நிழல் என எளிதே புலப்படுவதாகும். இவ்வரிய வல்லுணர் வால் பெற்ற கருத்தின்பத்தை அவன் பிறர்க்கு அறிவித்துப் புலப் படுத்தும் வகையால் அவனுக்குத் துணை நிற்பது இவ்வுவமையே! மகிழ் என்று பொருள்படும் 'உவ' எனும் வேரடியாகப் பிறந்த உவமை யால் பெறுவதும் மகிழ்ச்சியே. மகிழ்வூட்டக்கூடிய இவ்வுவமை முழு வடிவினதாகக் கையாளப் பெறுவதாகும். அரை குறை வடிவாகக் கையாளப் பெறும் உவமை பிறர்க்கு அரைகுறையான மகிழ்வையே ஊட்டும். கழக இலக்கியங்களில் பொதுளிக் கிடக்கும் இவ்வுவமை மணிகளைப் போல் பிற இலக்கியங்களில் காண்பது மிக மிக அருமை யாகும். ஆனால் பிற்காலத்தே இவ்வுவமை அணி தமிழ் இலக்கியங் களிலும் ஒளி குன்றிப் போனது. கண் திறவாக் குழவி தாய் முலைக் கண்ணைச் சரியாக அறிந்து கொள்ளாமல் இங்கும் அங்கும் வாய் வைத்து இடர்ப்படுதல் போல் புலமை நிரம்பாத போலிப் பாவலர் சிலர் போலி உவமைகளைக் கையாண்டு தாமும் பிறரும் இடர்ப்படச் செய்து வருவர். மெய்ம்மைப் பாவலரே உரிய உவமையால் அரிய பொருளை உணர்த்தும் திறன் பெற்று விளங்குவர்.

நேரடியாகத் தொட்டுக்காட்ட அறியாது புலமை நிரம்பி வராத பாவலர் சிலர் சுற்றி வளைத்துப் பொருள் கொள்ளுமாறு படிப்பாரை மயக்கித் திக்குமுக்கரடச் செய்யும் உவமைகளைக் கையாண்டு இலக்கி யத்திற்கே கறை சேர்ப்பர். பொறியின்பம் ஒவ்வொன்றும் தனித்தனி யான இன்பம் ஆகும். ஐம்பொறி யின்பந்திற்கும் அடிப்படையான ஐம்புலனுணர்வுகளுக்கும் தனித்தனி பொருந்தும் உவமைகள் தாம் அவ்வைம்பொறிகளுக்கும் தனித்தனி இன்பம் நல்குவனவாம். கண்ணுக்கு அழகான ஒரு பொருளால் காதுப் புலனுக்கு இன்பஞ் சேர்க்க முடியாது. மூக்குக் கிசைவான ஒரு பொருளால் கண்ணுக்கு இன்பஞ் சேர்த்தல் இயலாது. கழகக் கால இலக்கியங்களில் கிடக்கும் உவமைகள் முற்றும் பொறிக்கும் புலனுக்கும் ஏற்ற உவமைகளே ஆகும். பிற்காலப் போலிப் புலவர்களே காதுக் கேற்றுவனவற்றைக் கண்ணிலேற்றிக் கரிக்கச் செய்வதும், கண்ணில் ஊற்றுவதை வாயி லூற்றிக் கசக்கச் செய்வதும்; மேனியில் தடவவேண்டியதை மூக்கில் தடவி புன் நாற்ற மடிக்கச் செய்வதுமான உவமைகளைப் பெய்து

இலக்கியக் குழப்பங்களைச் செய்து உணர்வுக் கலக்கத்தை உண்டாக்கினர். இக்கால் அக்குழப்பமும் கலக்கமும் உற்ற புன்மைப் பாவலர் எல்லாரும் கழிவாயில் தள்ளப்பட்டதை நுழைவாயிலும், நுழைவாயில் ஊட்ட வேண்டியதை எருவாயிலும் தந்து மக்கள் உள்ளுணர்வையும் அறிவுணர்வையும் சிதறடித்துக் கொண்டுள்ளனர். இவ்வெல்லாரினும் முன் நிற்பவர் இன்றைய திரைப்படப் பாவலரே யாவர். இக்கால் திரைப்படப் பாவலர் எனப் பறையறையப் பெற்ற புல்லியர் எல்லாரும் ஒருவர் தவறாமல் தமிழ் வீழ்ச்சிக்கும் தமிழர் தாழ்ச்சிக்கும் காரணமானவர்களேயாவர். அவர்கள் எல்லாரும் சேர்ந்து குழப்பிய பாட்டுக் குட்டையைப் பாவேந்தர் பாரதிதாசனைப் போல் எத்தனையர் வந்து எத்தனை மருந்தான பாடல்களைக் கொட்டினும் தெளிய வைக்கமுடியாது. தீநாற்றமடிக்கும் பாட்டுக்குட்டைகளைக் கலக்கிவரும் இந்த 'ஜாலிலோ' பாவலர்களும் 'ஆயி ஊயி' பாடகர்களும் இறந்துபடுகின்ற நாளே தமிழ் இலக்கியம் தலையெடுக்கும் நாளாகும். செல்வத் தலையெடுப்பால் மெய்ம்மையான தமிழ்க்கலை சீர்கெட்டு விளங்கும் இன்றைய தமிழ்நிலம் பழந்தமிழ் நாட்டுக் கழிவறைகளினும் தீநாற்றம் வீசுவதாகும்.

இனி, மேலும் இப்புல்லியர் பற்றிய நினைவுகளில் நம் எண்ணங்களைச் செலவிடாது, ஒள்ளிய நினைவுகளில் உய்ப்பதே அறிவாகும் ஆகையால், பாவேந்தர் பாரதிதாசன் தம் பாடல்களில் கையாண்ட உவமை வளங்களையும் அவற்றால் விளங்கும் அறிவு நலன்களையும் ஒருவாறு காண்போம்.

மெய்ம்மைப் பாவலன் ஒருவனுக்கிருக்க வேண்டிய உணர்வு நலன்களிலெல்லாம் பாவேந்தர் பாரதிதாசன் ஓரளவு கைவரப்பெற்றவராகையால் அவர் கையாண்ட உவமைகளும் இனிதே சிறந்து படிப்பார்க்கு இன்பம் நல்கித் துடிப்பார்க்க வைப்பன். இயற்கை நடமாடும் இவ்வுலகக் காட்சியின்பமாகட்டும், செயற்கை விரவும் இவ்வுலகமாந்தர் உள்ளிட்ட உயிரிகளின் நிகழ்ச்சி யின்பமாகட்டும் எதனைக் காட்டுவாராயினும் அதனையுணர்த்த அவர் காட்டும் உவமைகள் கற்றறியா எளிய மாந்தர்க்கும் விரைவாய் விளங்குவனவாகும். மனவுணர்வுகளையும் அறிவுணர்வுகளையும், மாந்தரின் புற நிகழ்ச்சிகளைப் போல அறிவதும் அறிந்துரைப்பதும் அவ்வளவு எளிமையன்று; இனி அவற்றிற்கோர் உவமை கூறிப் புலப்படுத்துதல் அரிதினும் அரிதாம். இவ்வரிய ஆற்றலை மிக எளிய முயற்சியில் கைப்போங்காக எடுத்துக் காட்டி

யிருப்பது விரும்பத்தக்கது மட்டுமன்று; வியக்கத் தக்கதுமாகும். அவ்வகை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கே வித்தூன்றுவதும் ஆகும். இவ்வடிப்படையில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் வருங் காலத் தமிழக ஆட்சி அமைப்பிற்கு எருவிடுவனவாம். அக்கால், தமிழக இலக்கிய நலன்களை உள்நின்று அரித்துவரும் இந்நாளைய திரைப்படக் கெக்கலியிசைப் பாடல்களின் கோமாளிப் பாவலர்கள்தம் வெறு உருவங்கள் காறி உமிழப்படும் என்பதை அவர்கள் இன்றே உணர்ந்து கொள்வார்களாக. அழிக்கவியலாத் தமிழ் இலக்கிய அடிப்படையான மரபை என்றும் நிலை நாட்டிக் கொண்டுள்ள தமிழக இலக்கியப் பாடல்கள் எங்கே! தம் புல்லிய அறிவால் தினவெடுக்கும் பாலியல் உணர்வுகளை அளாவிக் கண்டெடுத்து நல்லியல் மாந்தர்தம் உள்ளியங் குணர்வுகளைக் கீழ்மைக்கு அடிப்படுத்தும் இப்போலிப் பாவலர்களின் மலக்குவியலன்ன பாடல்கள் எங்கே! மலர்வாய் மணமும் எருவாய் தீநாற்றமும் ஒரே உடலில் அமைந்திருத்தல் போல் இவ்விருவகைச் சிறப்பும் இழிவும் நம் தமிழ் இலக்கிய உடலில் அமைந்திருத்தல் இயற்கையே. ஆனால் சென்றவிடத்தாற் செலவிடாது தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பதன்றோ அறிவாகும் என்பதை இற்றைத் தமிழர் உணர்ந்து அவற்றிலெல்லாம் கருத்துக் கொள்ளாதொழிவார்களாக.

இனி, பாவேந்தரின் மனச்சிட்டு பாய்ந்து அளாவிய இலக்கிய வானில் அதுகண்ட காட்சிகளுக்கிணையாக அது காட்டிய உவமைகள்தாம் எத்துணை அழகு சான்றன! அறிவு கொளுத்துவன! உணர்வறியா நெஞ்சத்தும் உணர்வெழுப்புவன! பாவேந்தர் காட்டிய உவமைகள் உருவங்களின் நிழல் போல்வன; ஆனால் அவ்வுருவங்களைப் போலவே பளிச்சிடுவன! அவற்றில் மூலப் பொருளின் குளிர்ச்சியும் சூடும் நிரம்பியிருக்கும் முதற்பொருளின் கருவும் திருவும் அழியாமல் குடிகொண்டிருக்கும். தலைவனையொட்டி நடக்கும் தலைவியின் இணைந்த போக்குப்போல் அணைந்து நடைபோடும். இவ்வாறு ஒருங்கிணைந்து செல்லாத உவமைகள் படிப்பாரின் பாட்டுணர்வைத் திசைதிருப்பிவிட்டுத் தடுமாறச் செய்யும் தன்மை வாய்ந்தன. பாரதிதாசனின் பாடலில் சுடர்விடும் உவமைகள் இதற்கு விதிவிலக்கு. ஒரு காட்சியைப் பாருங்கள்.

(தொடரும்)

அச்சக அமைப்புக்கு
உங்கள் பங்கைச் செலுத்திவிட்டீர்களா?

நெடுநாட்களாக நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

சிறுவர் இதழ்

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்!
திங்கள் ஒரு முறை!

தாளிகை உலகிலேயே ஒரு புரட்சி!
உங்கள் பிள்ளைகளைச் செந்தமிழ் மறவர்களாகவும்
பண்பாடு உள்ள தமிழ்க்குடி மக்களாகவும்
ஆக்கும் தனித்தமிழ்ப் பாற்குடம்!

மடங்கல் (ஆவணி) முதல்நாள் அன்று வெளிவரும்!

தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் ஒன்றாகவே விற்பனைக்கு வரும்.

	உள்நாடு ஈழம்	வெளிநாடு.
தனி இதழ் :	15 காசு	25 காசு.
ஆண்டுக் கட்டணம் : (ஆண்டுமலருட்பட)	2 உருபா	3 உருபா.

- ஓரிதழுக்கு 30 காசு மேனி முன் பணம் கட்டும் முகவர்கள் உடனே விண்ணப்பிக்க!
- தென்மொழி முகவர்களும் முன்பணம் கட்டுதல் வேண்டும்.
- குறைந்த படிகளே அச்சிடுவதால் தேவைக்கு முந்துங்கள்!

பிற விளக்கங்களுக்கு :

அமைச்சர்

தமிழ்ச்சிட்டு

தென்மொழி அச்சகம், கடலூர்-1.

துரை-மாணிக்கம்

(7)

பாடிய பெடைக்குயிற் கம்பு பட்டதா
ஆடிய மயிற்குக் கால்முறி வானதா
ஐயையின் காதல் அடியற வீழந்தது!
ஐயை அணிந்த அணிகள் அகன்றன ;
மெய்மெலி வுண்டது! மேனி பசந்தது!
நெய்குழல் மறந்தது! விழி,மை துறந்தது!
கைதொடி நெகிழ்ந்தது; காற்சிலம் பகன்றது!
ஐவனம் உகிரும் அங்கையும் அற்றன!
அம்பொன் சீரடி அணிநடை மறந்தது!
செம்பொன் சிறுகுடம் ஒளிமழுங் கிற்று!
கொட்டிலில் ஆக்கள் கட்டிக் கிடந்தன!
பட்டியில் ஆடுகள் படுத்துச் சோர்ந்தன!
எருவும் நீரும் இரண்டறக் கலந்து
நடவுறும் வயலெனக் கொட்டில் உளைந்தது.
காய்த்த சுரைக்கொடி காயொடு காய்ந்தது!
பூத்த மல்லிகை நிலத்துப் பொலிந்தன!
படுத்த படுக்கையாய்ப் பாவை கிடந்தாள்!
உடுத்த துகிலொடும் உண்ணு வயிற்றெடும்

முதியோள் திண்ணையில் முழங்கால் நீட்டிக்
கொதிக்கும் நெஞ்சொடும் உயிரொடும் குமைந்தாள்!
அடுப்பணைந் திருந்தது; அடிவயி றழன்றது!
எடுப்பிலாப் பொருள்கள் இருந்தவா றிருந்தன!
ஈரிரா இருபகல் அன்பின் இருவரும்
நீரும் பருகிடும் நினைவற் றிருந்தனர்!
வீசிய புயலால் விளைந்த விளைவிவை!
மாசிலா மங்கை மனத்துயர் தணிந்து,
'தன்னால் அன்றோ தாய்க்கும் மகற்கும்
இன்னல் விளைந்த' தெனநினைந் தழுதாள்!
அவளுளம் அவனை அடைய விழைந்ததும்
துவளும் நெஞ்சுடன் தாயைத் துறந்த
பெரும்பழி கொண்டதும் பிழையென வருந்தினாள்!
துரும்பினும் இழிந்த நிலைநினைத் திடிந்தாள்!
மாற்றிக் கொள்ளா மனத்தோள் ஆகித்
தூற்றப் படுவதை எண்ணித் துடித்தாள்!
மறவா அன்பினை மனங்கொளப் பயின்ற
இறவாக் காதற்கு இளமையைக் கடிந்தாள்;
பிள்ளை நிலைமுதல் பேணி வளர்த்த
கள்ள மனத்தின் காதலை இகழ்ந்தாள்!
பொற்புறு காதல் மெய்ம்மையைப் போற்றும்
கற்பின் பெருமையைக் காறி உமிழ்ந்தாள்!
ஒருநிலைப் பட்ட காதல் உளத்தினால்
பெருநிலைப் படூஉம் பெருமை போகி
இயலா ஒருத்தியால் காதலும் இழிந்த
பயனிலா நிலைக்குத் தன்நிலை பழித்தாள்!
பிறந்ததும் அன்னையைப் பிரிந்து துயருறும்
மறந்த துன்பமும் மனச்சுமை சேர்த்தது!
எண்ணா தனவும் எண்ணி வருந்தினும்
அன்னவன் நினைவே அவளுக் கிருந்தது!
அத்தான் மனத்தை முழுவதும் ஆண்டோள்
எத்திறத் தாளோ என்னினும் அன்பை
வாரிக் கொடுக்கும் வாய்மையி னாளோ?
சீரெழிற் குறையாச் செல்வி யாளோ?
குறிப்பிலா வினைசெயும் குறிப்பி னாளோ?

அறிகிலே னேஎன ஐயை ஏங்கினுள்.
செம்மலைப் பற்றிய எண்ணம் சிலித்ததும்
இம்மையில் அவனுளத் தேறி வாழ்தற்கு
இடந்தரா விடினும் இனிவரும் பிறவியில்
திடமாய் இடம்பெறத் தெய்வம் வணங்கினுள்!
"இந்நிலை தனனிலும் அத்தான் என்றனைக்
கொள்ளேன் என்றுரை கூற வில்லையே!
தும்பை உயர்ந்தா ளாகவே துலங்குக!
தம்புதுக் கேள்வற்குத் தக்கோள் ஆகுக!
அத்தான் உளத்தில் அமர்ந்தோள் ஆதலின்
வெற்றுப் பெண்ணு யிராள்; குல விளக்கே
ஆதல் வேண்டும் தும்பை; அவளைச்
சாத லுறுமுன் காணலும் சரியே!
ஒருநாள் என்றன் உயர்ந்த அன்பினைத்
திருமிக வாய்ந்த தும்பையி னிடத்தே
அன்பொடு கூறி அத்தான் வாழும்
இன்புறு மனையில் எனக்கோ ரிடத்தைப்
பெற்றுக் கொள்ளினும் பிழையிலை; தும்பை
ஒத்துக் கொள்வதே எனக்குநல் ஊழாம்!
ஆனுல் என்னை அடைவதில் அத்தான்
நான்பெறும் மகிழ்வையும் நலத்தையும் பெறுவரோ?
அறிகிலே னே'' என ஐயை நினைத்தாள்.
பெருகிடும் அன்புப் பெருக்கினுல் பேதையோள்
இப்படிப் பலவா றெண்ணி மகிழ்ந்தே
அப்படி நடந்தபின் அடுத்து நடப்பதும்
தொடர்ந்து நினைந்தாள்; தோள்கள் சிலிர்த்தன!
இடருறக் கைகளை ஊன்றி எழுந்து
படர் துயர் அறியாப் பாவை
நடந்தனள் முன்றிற்கு அத்தையை நாடியே!

(8)

பாவையும் அத்தையும் படிப்படி யாக
தூவிய துன்பச் சூழலை மறந்து
தம்முள் தேற்றித் தம்பணி தொடரினும்
செம்மலின் நினைவும் செய்கையும் பிரிவும்

இருவர் நெஞ்சினும் இரும்பாய்க் கனத்தன!
ஒருவற் கொருவர் ஆறுதல் உரைத்தனர்.
ஐயை நாளும் குன்றினை அடைவாள்!
மைப்பெருங் கல்மேல் மனச்சுமை அவிழ்ப்பாள்!
அவன்வர வெண்ணி அடுக்கிய கற்களை
துவளுற மீண்டும் எண்ணத் தொடங்குவாள்!
நகரப் பெருவழி மேல்விழி நாட்டுவாள்!
தகவுற விழிவழி நெஞ்சம் தாவியே
குன்றும் காவும் ஊரும் கடந்து
சென்று கல்விக் கழகத்துச் செம்மலின்
நெஞ்சத்துக் குடிபுக நின்று கதறும்!
கொஞ்சமும் அவனுளம் இரக்கம் கொளாதே!
ஆயினும் அவ்விடம் அகலா தவன்கால்
நாயெனச் சுற்றும்! நம்பியும் தும்பையும்
விளையாட் டயர்வதைக் கண்டு வெதும்பும்!
களிப்புறு காதலிற் கன்னியும் அவனும்
பின்னிப் பிணைவதைப் பார்த்துப் பேதுறும்!
நன்னர் அவர்செய் இல்லறம் நயக்கும்!
இறுதியில் ஐயை இருப்பிடம் திரும்பும்!
பரிதியும் சாயும்! ஒருநாள் பறக்கும்!
மறுநாள் மீண்டும் மனத்திரை விரியும்!
உறுபல நிகழ்ச்சியும் உருவெடுத் தாடும்!
செம்மலை மீண்டும் பார்த்திடத் துடித்தாள்!
வெம்பிய காதலை விளக்கிட எண்ணினுள்!
கண்ணீ ராலவன் கால்களைக் கழுவி
உண்ணே ராவியை அவன்மடி ஊழ்க்க
இசைவு தரும்படி இறைஞ்சி நெஞ்சினைப்
பிசைந்து அவன்கைப் பிழிந்திடக் கருதினுள்!
அப்படிச் செய்யினும் அடியொடு மறுத்தால்
எப்படி யாகிலும் அத்தையோ டிணைத்து
வைப்பதே தனக்கு வாழ்நாட் பயனெனச்
செப்பிய துள்ளம்! காதற் செல்வியும்
ஒப்பினுள்; ஆயினும் ஒருவழி உணராள்!
கொப்பிலாக் கொடியென உடலம் குலைந்தாள்!
ஐயை இவ்வாறு அவனையே நினைந்து

கையற் றேங்கிட அத்தையோ கன்னிமேல்
உள்ளம் வைத்து மெழுகாய் உருகினுள்!
கள்ள மிலாதவள் காதல் கதைக்கே
நெஞ்சு நெகிழ்ந்தாள்! நீராய் உகுத்தாள்!
கொஞ்சு கிலாக்கிளிக் குஞ்சினை நெருப்பினில்
தூக்கிப் போட்ட தூய்மை யிலானை
ஆக்கிப் படைத்த வயிற்றினுக் கழன்ருள்.
எவ்வா ருகிலும் இழந்த வாழ்வினை
ஒவ்வாத் தனிமையை உவகையால் மாற்றிச்
செம்மலின் நினைவு அடியறச் சிதைத்தே
அம்மயில் தனக்கோர் ஆவல் மணாளனைத்
தேடிப் பிடித்துத் திருமணம் செய்து
வாடிய உளத்தைத் தழைத்திட வைப்பதே
தக்கதென் றெண்ணினுள்! தன்னுளக் கருத்தை
ஒக்க அவளிடம் உரைக்கநாள் பார்த்தாள்!
அன்னவர் போக்கிலோர் ஆண்டு பறந்தது!
முன்னர் போர்த்த முழுத்துயர் முட்டம்
ஒருவா ருக ஒழிந்தது எனினும்
வெறுவான் போல விலகிட வில்லை!
முதியோள் உள்ளம் முன்னரே துன்பத்து
வதிந்து பழகிய உள்ளம் ஆகலின்
மகன்றன் பிரிவால் மறுகிய நிலைபோய்
துகளறு நங்கையின் துயர்க்கே கசிந்தது!
சுவையா இளமை, சூழலால் காய்வதை
எவையினும் துன்பமா இவள்மனம் நினைத்தது!
கொத்தும் உளத்தின் கோதையின் மொய்ம்பு
மொய்க்கும் பருவத்து முத்தவாய்ச் செவ்விதழ்
கைக்கும் தனிமையால் காய்வதை ஒப்பிலள்!
துய்க்குந ரின்றித் தோள்கள் மெலிதலால்
தைக்கும் நெஞ்சு தவிப்பதைத் தாங்கிலள்!
மோப்பா ரின்றித் தூமலர் வாடியே
கேட்பா ரற்றுக் கிடப்பதைப் பொறுத்திலள்!
நுகர்வா ரற்று நுடங்கிடும் மேனி
பகர்வா ரிலாது படுவதைப் பார்த்திலள்!
திகழும் உள்ளத்துத் தெய்வக் காதலாள்

மகிழும் வாய்ப்பிலா மடிவதை ஏற்கிலள்!
ஆகலின் முதியோள் ஒருநாள் அந்தியில்
பாகியல் மொழியினைப் பக்கத் தழைத்துக்
குழலுறப் பின்னிக் கொழுங்கொடி முல்லை
அழகுறச் சூட்டி, 'அன்பே!' என்றாள்
செல்வியும் உரைக்குச் செவிதர, முதியோள்
பல்வகைத் துன்பம் பாவைக் காகப்
பிள்ளைப் பருவ முதலாப் பட்டதைக்
கள்ளம் இலாமல் கழறிக் காட்டியும்
வளம்பல வாய்ப்பினும் மாந்த வாழ்விற்கு
இளமையே சிறந்ததென் றெடுத்து நாட்டியும்,
பண்பினும் அன்பினும் பலபடச் சிறப்பினும்
பெண்தனி வாழுதல் பிழையெனச் சுட்டியும்
ஈண்டிய செல்வம் இருப்பினும் இல்லற
மாண்பிலா திருத்தல் மடமையென் றிடித்தும்
மாண்புறு மங்கையர் வாய்மைக் காதலைப்
பேணிலான் பின்செலல் பேதைமை என்றும்
ஆண்டமை நல்லர சோச்சிநா டாளினும்
ஆண்துணை யற்றவள் வீணென விளக்கியும்
அன்பினும் அறத்தினும் ஆண்மைத் துணையினும்
இன்புற வாழ்வதே ஏற்றதென் றுரைத்தும்
விரும்பிய தேய்ந்திடா வேளையில் வாய்ப்பதை
விரும்பி மகிழ்வதே அறிவென விண்டும்
ஆர்த்த இளமையில் அறிவினால் பெண்மையைக்
காத்துக் கொள்வதே கற்பெனக் கழறியும்
உணர்ந்து கொளானை ஒதுக்கி ஒத்தானை
மணந்து வாழ்வதே மாண்பெனக் கூறியும்,
பெண்பல பேறுகள் பெறினும் தாய்மைப்
பண்பிலா வாழுதல் பழியெனப் பழித்தும்
அத்தை ஐயையின் அன்புறு நெஞ்சினில்
வித்தாய் விளங்கிய செம்மலின் நினைவை
அடியுறக் கல்லி அழித்திட முயன்றாள்!
குடிபுகுந் தானை அகற்றிடாக் குலமயில்,
"ஐயகோ! அத்தை அன்பினும் என்பினும்
மெய்யினும் நரம்பினும் மிடைந்த சதையினும்

கொப்பளித் தோடும் குருதித் துணியிலும்
வெப்பமாய்க் குளிராய் விளங்கு நல் உணர்வாய்
எண்ணமாய் அறிவாய் இயங்கும் உள் உயிராய்த்
திண்ணமாய்க் கலந்தவென் காதல் திருவினை
மறந்துபோ என்னாது மணந்துகொள் என்னாது
இறந்துபோ என்னினும் இறைவனால் என்னுளத்து
ஆன்று சுடர்விடும் அத்தான் நினைவோடு
ஈண்ட இவணே இறந்தொழி வேனே!
பெண்மையும் அன்பும் பின்னித் துளும்பும்
உண்மைக் காதலின் வன்மை உணராது
அன்னைக் குலத்தின் அருமணி நீங்களே
என்னை மறந்து மணந்துகொள் என்று
வாய்மைத் திருவாய் வலியாது கூறிடின்
தாய்மை மறந்து தருக்கால் குலைவுறும்
ஓவா உலகத்து யாரிடம் நான்போய்க்
காவா நிற்பீரென் அன்பென்று கதறுவேன்!
உய்விலா தென்றன் உயிரினை இறைவனே
நொய்யச் சிதைப்பதில் என்பயன் கண்டையோ!
ஐயகோ "அன்னாய்" என்றே அலறி
ஐயை வீழ்ந்தாள்! அத்தைதாங் கினளே!

(படரும்)

தென்மொழியின் மூன்றாந் தொகுப்பு.

தென்மொழி மூன்றாஞ் சுவடியின் 12 ஓலைகளும் முழுமையாகக் கிடைக்கப் பெறாத அன்பர்கள் கவலுற வேண்டா. 12 ஓலைகளையும் இணைத்து அழகிய கட்டடமாக்கியுள்ளோம்.

பதிவஞ்சல் செலவு உட்பட உருபா பன்னிரண்டு முன்பணமாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தென்மொழியின் இரண்டாந் தொகுப்பும் உருபா பன்னிரண்டுக்குக் கிடைக்கப் பெறும்.

இன்றே எழுதுக!

அமைச்சர்

தென்மொழி.

உருவங்கள் திரியும் உலகம்!

(மு. மகிழரசன்)

மெய்யும் மனமும் மறைத்தபல் மேனி மினுமினுக்கிக்
கையும் களவும் கரந்து சிரித்துக் கலகலெனப்
பொய்யும் புரட்டும் மலியப் பொலிந்துபல் புன்செயலும்
செய்யும் உலகிது! செய்வதென் நாமிவண் செம்மனமே!

சொல்லும் செயலும் முரணச் சுழன்றுறச் சொந்தநலம்
அல்லும் பகலும் அயில மயங்கி அடுத்தவரைப்
புல்லும் புழுவும் புரைய மதித்துட் புறமிதித்துக்
கொல்லும் உலகிது! கொள்கையிற் கோடாக் கொழுமனமே!

கள்ளத் தனமும் கயமைத் தனமும் கடிதுயர
எள்ளத் துணையும் கவலையும் இன்றி இழிந்திழிந்து
பள்ளத் தினிற்போய்ப் படுக்கும் பெருமைகொள் பாழுலகம்
எள்ளத் தகுவதோ? ஏத்தத் தகுவதோ? என்மனமே!

நட்டுஞ் சிரிக்கும்; நடுவிற் கிடைக்கும் நலமிலையேல்
விட்டுஞ் சிரிக்கும்; வினையும் கெடுக்கும்; விளைபகையால்
கெட்டுஞ் சிரிக்கக் கிடக்கும் கெடுமதிக் கீழுலகைத்
திட்டிச் சிரிப்பதோ? தீட்டி அறுப்பதோ? தேர்மனமே!

அன்புறை யாமல் அலைந்து கடுக்கும் அகவுலகம்;
பொன்போல் உரையால் பொலிந்து கொடுக்கும் புறவுலகம்;
இன்ன தகையாய் இகந்து கிடக்கும் இழிவுலகைப்
பன்னி அடிப்பதோ? பாடி இடிப்பதோ? பொன்மனமே!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி உறவுணர்த்திக்
கள்ளென்று துய்த்துக் கனியென்று மொய்த்துக் கடைசியிலே
சுள்ளென்று சீறிச் சுருக்கென்று தைத்துட் சுருண்டுவிழத்
தள்ளென்று தள்ளும் உலகிது! தேர்நீ தனிமனமே!

மானம் இழிந்து மதிப்பும் இழிந்துநல் மாண்பிழிந்து
போன புரைகொள் நிலையோ புதுமை! பெருமை! என
நாணம் இலதாம் நகுதகு போலிப்புன் நாகரிகம்
காணும் உலகிது கண்டாய்! கருதிக் கவல்மனமே!

தன்னை உயர்த்தித் தருக்கிப் பிறரைக்கீழ் தாழ்த்திவிடும்;
பொன்னில் மயக்கும்; பொருளைப் பறிக்கும்; புரைநெளியும்
சின்ன மனத்தர் சிரித்துக் குதிக்கும் செயிர் உலகம்!
என்ன உரைப்ப திவண்நாம் எளியம்! எழில்மனமே!

அறமற் றதுகாண்! அறிவற் றதுகாண் அருளழகு
நெறியற் றதுகாண்! நினைவற் றதுகாண்! நெடுஞ்சுவர்போல்
உறவற் றதுகாண்! உணர்வற் றதுகாண்! ஒழுக்கமுண்மைத்
திறமற் றதுகாண்! திருந்தா உலகம்! திருமனமே!

பிணங்கள் திரியும்; திரியும் உருவங்கள்; பேய்களின்புன்
கணங்கள் திரியும்; திரியும் அரவங்கள்; காதலில்லா
மனங்கள் திரியும்; திரியும் அவலங்கள்; மண்ணுலகைச்
சினங்கொள் வதுவோ! சிணுங்கு வதுவோ! செழுமனமே!

வாழ்க்கை வரலாறு

சார்சு வாசிங்டன் கார்வர்

"வழுதி"

1915 இல் புக்கர் வாசிங்டன் மறைந்தார். கார்வர் இருபதாண்டு நெருங்கிய நட்பையும் துணையையும் இழந்து தவித்தார். நெஞ்சின் பெருந்துயரத்தை உழைப்பாலேயே மாற்ற முயன்றார் கார்வர். பல்வேறு புதிய திசைகளில் தம் ஆராய்ச்சியைத் திருப்பலாயினர். தசுக்கீசீ உழவியல் ஆராய்வுக் கழகம் நிறுவப் பெற்றது. பாடம் கற்பிக்கும் வேலையைக் குறைத்துக்கொண்டு ஆய்வுகளிலேயே மிகுதியும் தோய்ந்தார் கார்வர். பயிரியல், உணவியல், வேதியல் நிலைத் திணையியலின் பல்வேறு உட்பிரிவுகள் அனைத்திலும் கார்வரின் ஆராய்வு புதிய திருப்பங்களையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியது. அவற்றினும் பிறர் கழிவென்று தள்ளும் பொருட்களில் பல புதிய பயன்களைக் கண்டு பிடிக்கும் ஆக்கப்பணியில்தான் கார்வர் மிகுதியாக ஈடுபட்டார். இதுவே கார்வர் உலகுக்களித்த அளப்பரும் பெருங் கொடை என்று பலர் கருதுகின்றனர். உமியிலிருந்து துணி, மண்ணிலிருந்து வண்ணக் கலவைகள் பட்டாணித் தோலிலிருந்து செயற்கைச் சலவைக்கல் இவற்றையெல்லாம் உருவாக்க முடியுமென்று அதற்கு முன் எவரேனும் கனவு கண்டிருக்க முடியுமா? ஞெகிழி (plastic) செய்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர் இவரே. பைன் மரத்திலிருந்து தாள், சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து மாவு, ஒட்டும்பசை, உலர்ந்த உணவு, போன்ற 118 வகையான பொருள்களை உண்டாக்கினர். கடினமான மாட்டு இறைச்சியை மென்மையாக்க ஒருவகை நரந்தம் பழத்தின் (Osage Orange) சாற்றினைப் பயன்படுத்தினர். உழவர்கள் பிடுங்கி எறியும் களைகளையும் அவர் புறக்கணித்தாரல்லர். களைகளை வகைப்படுத்தி 250 வகைகளாக அவற்றைப் பிரித்து ஒவ்வொன்றின் மருத்துவப் பயனையும் உலகுக்கு உணர்த்தினர். செயற்கைத் துணிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுப் பருத்திக்கு விற்பனையும் மதிப்பும் குறைந்துவந்த காலத்தில் பருத்தித் தொழிலுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட்டவரும் கார்வரே. ஞெகிழி (plastic) செய்வதிலும், சாலையிற் பதிக்கும் செயற்கைக் கற்களிலும், உந்து உருளைகளிலும், உரங்களிலும் பருத்திப் பஞ்சினைப் பயன்படுத்த முடியும் என்று அவர் கண்டார். அவர் ஆராய்வின் விளைவாகத்தான் இன்று

சோயா அவரையின் எண்ணெய் உலகெங்கும் இயங்கிகட்குத் தூவு வண்ணம் (Spray paint) பூசுவதில் பயன்படுகின்றது.

பன்னூற்றுக் கணக்கான தம் கண்டு பிடிப்புகளில் ஒன்றே ஒன்றை மட்டும் அவர் தமக்கு உரிமையாக்கிக் கொண்டிருந்தாலும் அளப்பருஞ் செல்வத்தை அவர் ஈட்டியிருக்கலாம். ஆனால் கார்வர் ஒன்றுக்குக் கூட ஒரு காசும் பெற்றுக் கொள்ளவில்லை. அனைத்தையும் இலவசமாக அள்ளி வழங்கினர். பணத்தை அவர் துளியும் மதிக்கவில்லை. தம் சம்பள உயர்வைத்தானும் பெற்றுக்கொள்ள மறுத்தார். “இதைக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். இந்த மண் முழுவதும் எனக்குச் சொந்தமாயிற்றே!’ என்பாராம் அவர். தசுக்கீசியில் வந்து சேர்ந்து நாற்பதாண்டுகட்குப் பின்னும் அவர் பெற்ற ஊதியம் தொடக்கத்தில் அவர்க்களிக்கப் பெற்ற 125 தாலர்களே. (தொண்டரென்று பறை சாற்றிக் கொள்ளும் தமிழ்ப் பேராசிரியன்மார்களே, எண்ணிப் பாருங்கள்!) அதுமட்டுமா, தம் சம்பளக் காசோலைகளைக் கூட அவர் மாற்றாமல் சட்டைப் பைக்குள் திணித்து வைத்திருந்தது எத்தனை நாட்களோ? கணக்கை ஒழுங்கு செய்வதற்காகக் கணக்கர் அவற்றை மாற்றிக் கொள்ளும்படி அவரை வற்புறுத்த வேண்டியிருக்குமாம். மாற்றிய பணமும் எங்கே செல்லும் என்று நினைக்கின்றீர்கள்? யாவராயினும் ஒருவரின் துன்பத்தை மாற்றுவதற்குத்தான். வெள்ளையர், கறுப்பர் என்ற வேறுபாடில்லாமல் எத்தனையோ ஏழை மாணவர்கட்கு அவர் தம் ஊதியத்தின் பெரும் பகுதியை வழங்கியுள்ளார்.

எத்தனையோ தொழில் வாணிகர்கள் அவர் முறைகளை அறிந்து கொள்ள விரும்பினர். அவர் எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுக்க அணியமாயிருந்தனர். ஒருவர் ஒருமுறை நோயுற்ற பட்டாணிகளை அனுப்பி, அந்நோயை நீக்க வழி கேட்டு நூறு தாலர் காசோலையையும் அனுப்பி யிருந்தார். கார்வர் சரியான வழியைக் கூறினால் தொடர்ந்து அவருக்கு மாதம் தோறும் வேறு பணம் அனுப்புவதாகவும் எழுதியிருந்தார். கார்வர், அந்நோய்ை நீக்க வழியையும் கூறினார். பணத்தையும் திருப்பி அனுப்பி வைத்தார். “பட்டாணியை உமக்களித்ததற்கு இறைவனே எந்த விலையையும் உம்மிடம் பெற்றுக் கொள்ளாத பொழுது, ஏதோ அதன் நோயைத் தீர்த்துவிட்டதற்காக நான் மட்டும் உம்மிடம் எப்படி விலைபெற்றுக் கொள்வது?” என்று எழுதிவிட்டார்! எத்துணை விரிந்த உள்ளம்! வண்ணந் தோய்க்கும்

குழுமம் ஒன்று கார்வரின் புதிய வண்ண முறைகளைப் பயன்படுத்திக் கொள்ள விழைந்து கார்வருக்குப் புதியதோர் ஆய்வுக் கூடமே கட்டித் தர முன்வந்தது. அதோடு தொகை குறிப்பிடாத காசோலை ஒன்றை யும் அனுப்பி வைத்தது. தாம் கண்டு பிடித்த 536 புதியவண்ணக் கலவைகளையும் அவற்றை உண்டாக்கும் முறைகளையும் அதற்கு விளக்கிக் காசோலையையும் திருப்பிவிட்டார். கோடிக்கணக்கான தாலர் விலை பெறக்கூடிய முறைகளை யெல்லாம் இவ்வாறு இலவசமாகவே கார்வர் அனைவருக்கும் வேறுபாடு கருதாமல் அறிவித்து வருவது அவரைச் சுற்றியிருந்தவர்கட்கு வியப்பாகவே யிருந்தது. பலர் அவரைப் பணம் பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினர். “இவ் வாற்றல் எனக்கு இறைவன் அளித்தது; இலவசமாக அளித்தது. இதற்கு நான் விலை வாங்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது எனக்கு வியப்பையே தருகின்றது!” என்று கார்வர் கூறினர். “இத்துணைப் பணமும் இருந்தால் உங்கள் இனத்தாருக்கு நீங்கள் உதவ முடியுமே” என்று சிலர் கேட்டனர். “இத்துணைப் பணமும் இருந்தால் ஒருவேளை நான் என் இனத்தாரை மறந்துவிடவும் கூடு மல்லவா?” என்று விடையளித்தார் கார்வர்.

உலகெங்குமிருந்து கார்வருக்கு மடல்கள் குவிந்த வண்ண மிருந்தன. நாளொன்றுக்கு ஏறத்தாழ 150 மடல்கட்கு அவர் விடை யெழுத வேண்டியதாயிற்று. அனைத்தையும் முறையோடும் ஒழுங் கோடும் செய்தார்; அவரைக் காண மக்கள் நூற்றுக் கணக்கில் திரண்டனர். அனைவரையும் அவர் பார்த்துப் பேசினர். ஏழை உழவர்கள், பள்ளி மாணவர்கள், தோட்டக்காரர்கள், ஏவலாளர்கள் ஒவ்வொருவரும் அவரவர்க்குள்ள சிக்கல்களைக் கார்வரிடம் கொண்டு வந்தனர். ஒவ்வொருவர்க்கும் வேண்டுவன கூறி அனுப்பி வைத்தார் கார்வர்.

தசுக்கீசியின் முதுபெருங் கிழவராக அவர் காட்சியளித்தார். நாற்பது ஆண்டுகட்கு முன் ஏம்சு கல்லூரியில் நண்பர்கள் அவர்க் காக வாங்கிய ஆடைகளை அவர் இன்னும் அணிந்து வந்தார். பழையது, கிழிந்தது என்று அவர் எதையும் நினைக்கவேயில்லை. தம் தோற்றத்தைப் பற்றிப் பொருட்படுத்தவுமில்லை. உமியைக் கூழாக்கிப் பின்னிய கழுத்துக் கட்டியை அவர் அணிந்திருந்தார். அவர் ஆராய்ந்து கண்டு பிடிக்கும் புதுப்புது வண்ணங்களையெல்லாம் அதில் அவ்வப்பொழுது தேய்த்து வைத்திருந்தார்! இத்தகைய புறத்தோற்

றத்தின் நடுவிலும் அவரின் அகத்தொளி முகத்தில் மின்னியது இனிய புன்னகை ததும்பும் பார்வையும் இறையொளி தவழும் முகமும் காண்பவர்க்கு மகிழ்வூட்டின.

மிக முதுமையிலும் அவர் உழைப்பினின்று ஓய்வு பெற்றாரல்லர். அனைத்து வேலைகளின் நடுவிலும் அவர்தம் அழகுணர்வு மங்கிவிட வில்லை. ஓவியங்களை வரைந்து கொண்டிருந்தார். ஓவிய வகுப் பொன்றையும் தொடங்கினார். அப்பகுதியில் கிடைத்த களிமண்ணி லிருந்தே பல்வேறு வண்ணங்களையும் குழைத்துக் கொள்ளவும், பட்டாணித் தோலின் கூழிலிருந்து ஓவியத் திரைகளை உண்டாக்கிக் கொள்ளவும் அவர் கற்றுக் கொடுத்தார். அவர் தாமே வரைந்த ஓவியங்கள் உலகப் பரிசு பெறத்தக்க அளவுக்கு மதிப்பு வாய்ந்தவை யாக இருப்பினும், அவற்றையும் அவர் தமக்கென வைத்துக்கொள்ள வில்லை. யார் எப்பொழுது கேட்டாலும் கொடுத்து விடுவார்.

நல்ல மெய்யறிவுச் சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார் கார்வர் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளைகளில் அவர் மாணவர்க்கு அறி வியலுக்கும் உண்மைச் சமயத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றிப் பல சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கின்றார். சமய உட்பிரிவு களின் போலிப் பூசல்களை அவர் வெறுத்தார். அவற்றைக் கடந்து நிற்கும் மெய்யுணர்வையே அவர் வற்புறுத்தினார். கிறித்தவ சமயத் தின் மெய்ம்மைகள் பலவற்றை அவர் மக்களுக்கு விளக்கிக் கூறி யுள்ளார்.

"இயற்கை என்பது என்ன? எல்லையற்றுப் பரந்த ஒரு வானொலி நிலையமே. இறைவன் அதன் வாயிலாய் நம்முடன் தொடர்ந்து பேசிக் கொண்டே யிருக்கின்றார். நாம் வானொலிப் பெட்டியைத் திருப்பி வைத்தால் அவர் குரலைக் கேட்கலாம்". "சாவு என்னை எப்பொழுது அணுகுமோ ? என்ற வினாவே எனக்குத் துணை புரிந்தது." இவை அவர்தம் கூற்றுகளில் ஒருசில.

நீகிரோ இளைஞர் பலர் நிறவெறியரால் துன்புறுத்தவும், இழிவு படுத்தவும் படும்பொழுதெல்லாம் ஆறுதல் தேடிக் கார்வரிடம் வந்தனர். அவர்களின் துன்பத்தை அமைதியுடன் கேட்டு, வேண்டிய அறிவுரைகளையும் கார்வர் வழங்கினார். "யார் உங்களை வெறுத்தாலும், நீங்கள் மட்டும் வெறுப்புணர்ச்சிக்கு ஆளாக வேண்டா. உங்கள்

கடமையினின்றும் நழுவ வேண்டா. வெறுப்புடையவர்கள் அவ் வெறுப்பிலேயே புழுங்கிப் பொசுங்கிப் போகும் காலம் வரும். அறியாதவர்களோ உண்மையை அறிந்துகொள்வர். பொறுமையோடு அணியமாக இருங்கள் உண்மை விடுதலை ஒருநாள் அடைந்தே தீருவீர்கள். அனைவருக்கும் நிகராக நடத்தப் பெறுவீர்கள்''.

மாணவர்க்கு அவர் கூறுவார் : ''நீங்கள் செல்லும் இடங்களில் ''உங்கள் உதவி தேவையில்லை'' என்ற எதிர்ப்புக் குரல் உங்களை நோக்கி ஒலிக்கக்கூடும். இவையெல்லாம் முன்பே நடந்தவைதாம் என்று நினைவு படுத்திக் கொள்ளுங்கள். ஏசுபெருமான் கலிலேயாவுக்குச் சென்றபொழுது இவ்வாறு நடக்கவில்லையா ?''

அவர் அமைதியாக இருந்த பொழுதிலும் வெள்ளையரின் நிறச் செருக்குக்கு ஒருபொழுதும் அடிபணிந்ததில்லை. சமயம் வந்தபொழுது தக்க விடைகளால் அவர்களின் வாயை அடைப்பார். "நீகிரோவால் என்ன செய்யமுடியும்?'' என்று எள்ளலாகப் பேசுவார்க்கு, ''நீகிரோவால் எது செய்ய முடியாது என்று அறைகூவல் விடுப்பார். உலகப் புகழ் அவரை வந்தணுகிய பின்பும் கூட நிறவேறுபாட்டுக்கு அவர் ஆளாகாமல் இல்லை. ஆயினும் அவர் யாரையும் ஒதுக்கவில்லை. மதிக்காத இடம் என்று போகாமலும் விட்டாரில்லை. தம் உதவி எங்கெங்குத் தேவையாயிருந்ததோ அங்கங்கெல்லாம் சென்றார். அறியாமை இருளை அகற்றி அறிவொளியைப் பரப்பினார். நிறவெறியர்களின் குருட்டுத்தனமான விலங்குத் தன்மைக்கு இரங்கினார். புக்கர் வாசிங்டன் கூறியது போன்றே இவரும்,

''எவர் மேலும் கசப்புணர்வு, வெறுப்பு கொள்ளும் அளவுக்கு நான் அவ்வளவு இழிந்த நிலைக்கு இறங்கமாட்டேன். அந்நிலைக்கு என்னைத் தாழ்த்திவிட எவராலும் முடியாது'' என்பார்.

அரசர்களும், இளவரசர்களும் குடியரசுத் தலைவர்களும் பெருஞ் செல்வர்களும் கார்வரை வந்து கண்டு உரையாடி மகிழ்ந்தனர். சுவீடன் நாட்டு இளவரசர் அவர்பால் மூன்று கிழமைகள் மாணவராயிருந்தார். காந்தியடிகளும் கார்வரோடு தொடர்பு கொண்டிருந்தார். காந்தியடிகள் மேற்கொண்டிருந்த மரக்கறி உணவு முறையை வகுத்துக் கொடுத்தவர் கார்வரே. புலால் உண்பது இன்றியமையாததன்று எனவும், உடலுக்கு வேண்டிய அனைத்து ஊட்டங்களையும்

இயற்கையினின்றே — மரக்கறியினின்றே பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறி இந்திய மக்களுக்கேற்ற காய்கறி உணவையும், காய் கறி பயிர் செய்யும் முறைகளையும் அடிகட்கு அவர் விளக்கி எழுதி யிருக்கின்ருர். அமெரிக்காவின் பெருஞ்செல்வரும் தொழில் முதல்வரு மாகிய என்றி போர்டு (Hendry Ford) கார்வரின் நெருங்கிய நண்ப ராளுர். தசுக்கீசிக்கு அடிக்கடி வந்து சென்ருர். அவரைத் தொடர்ந்து வெள்ளையர் பலரும் வரலாயினர். அன்னுர், பின்னர் நிலையத்தின் வளர்ச்சிக்குப் பல நன்கொடைகளை வழங்கலாயினர். நாற்பத்தாறு ஆண்டுகளாகச் சம்பள உயர்வுகூடப் பெருமல் உழைத்த கார்வர் தமக்கு உதவியாக ஊதியம் பெறும் ஊழியர் ஒருவரைக்கூட வைத்துக்கொள்ளவில்லை. இறுதியாக அவரின் முதுமை கருதிப்பலரும் வற்புறுத்தியதற்கிணங்க ஆசுதின் கர்திசு எனும் இளைஞரை அவர் ஆராய்வுத் துணைவராக ஏற்றுக் கொண்டார். அவரையும் சொந்த மகனைப் போலவே நடத்தி வந்தார். கார்வர் திருமணம் புரிந்து கொள்ளவேயில்லை. ‘‘என் பணிக்குக் குடும்ப வாழ்க்கை உகந்ததன்று. எடுத்துக்காட்டாக, நாள்தோறும் காலை நான்கு மணிக்கே எழுந்து மலர்களோடும் செடிகளோடும் பேசிக்கொண்டிருக்க நான் வெளியே செல்லவேண்டும் என்பதை எப்படி நான் ஒரு மனைவிக்கு விளக்கிக் கூறுவேன்?’’ என்ருர்

மிகுதியான பொருளைத் தாம் விரும்பாத பொழுதிலும், தம் ஊதியத்திலேயே மிகுந்ததை இவர் சேர்த்து வைத்திருந்தார். அதனை அவர் தசுக்கீசி நிறுவனத்துக்கு உரிமையாக்கினுர். உழவியல், நிலத் திணையியல் பயிலவரும் ஏழை நீகிரோ மாணவர்கட்கு அப்பொருள் பயன்பட்டது.

கார்வரின் கண்டுபிடிப்புகள் அடங்கிய கண்காட்சி ஒன்று அவர் தசுக்கீசி வந்து சேர்ந்த நாற்பதாம் ஆண்டின் நினைவு விழாவில் திறக் கப்பெற்றது. பின்பு அது நிலையான தாக்கப் பெற்று இன்றும் ‘‘சார்சு வாசிங்டன் கார்வர் கண்காட்சி நிலையம்’’ என்ற பெயரால் நிலவி வருகின்றது.

1937 ஆம் ஆண்டில் கார்வரின் உடல் நலம் கெட்டது. குருதிக் குறைவு நோய் அவரைப் பற்றியது. மீண்டும் 1942 இல் அவர் நோய்வாய்ப்பட்டார். அப்பொழுது அவரின் அகவை எண்பது: ‘இனி ஒன்றும் செய்வதற்கில்லை’’ என்று கூறி மருத்துவரைப் பார்க்க

மறுத்துவிட்டார். இறுதிவரை மன ஊக்கத்தோடும் அறிவுத் தெளிவோடுமே இருந்தார். 1943 சனவரி ஐந்தாம் நாள் படுத்திருந்த கார்வருக்குப் பகல் உணவு கொண்டுவரப் பட்டது. பாலை மட்டும் சிறிது அருந்தினார். "போதும். நான் சிறிது உறங்குகிறேன்" என்று படுத்தார். அவ்வுறக்கமே நீடித்த உறக்கமாயிற்று.

உலகமுழுவதும் கார்வரின் மறைவுக்காக வருந்தியது. அவர்தம் அடக்க நாளில் தசுக்கீசி துயரச் சேற்றில் அழுந்தியது. செல்வரும் வறியரும், வெள்ளையரும் கறுப்பருமாகிய ஆயிரக்கணக்கான மக்கள் துன்ப அழுத்தத்தோடு கார்வருக்குத் தம் இறுதி மதிப்பைச் செலுத்தினர்.

அவர்தம் கல்லறையில் கீழ்க்கண்ட எழுத்துகள் பொறிக்குப் பட்டன.

"இவர் நினைத்திருந்தால் புகழோடு பொன்னையும் மலையாகக் குவித்திருக்க முடியும். இரண்டையுமே தூசெனத் தள்ளினார். உலகத்துக்குப் பயனுற வாழ்வதையே பெருமையாகவும் மகிழ்வாகவும் கருதினார்."

நம் "தமிழத் தொண்டர்"களின் கல்லறைகளில் என்ன எழுத்துகள் பொறிக்கப்படுமோ? (முற்றும்)

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

கோடை மலர்கள்.

எழுதியவர் : இரா. தமிழரசு. "தமிழகம்"

நா. வளையனேந்தல், பறம்புக்குடி.

விலை : 50 காசுகள்.

'கோடை மலர்கள்' என்னும் இச்சிறு நாடக நூல் இளைஞரொருவரின் புது முயற்சியாகத் தோன்றுகின்றது. நாடகத்துக் கமைய வேண்டிய உறுப்புகளும் நிகழ்ச்சிப் பொருத்தமும், கற்பனைச் செப்பமும் இந்நூலில் இல்லை. பள்ளிப்பருவ இளங்கற்பனை என்று கூறலாம். ஆயினும் நல்லுணர்வு இழையோடி யிருக்கின்றது. தனித் தமிழார்வமும் தலைதூக்கி நிற்கின்றது. இந்நூற்கருத்து கதையைப் பொறுத்தவரை பிழையில்லை எனினும் இன்றைய தமிழ் இளைஞர்களின் கற்பனை வழி தப்பிச் செல்கின்றது என்பதையே காட்டுகின்றது.

நாடகம் மேடையில் நடிப்பதற்குப் பொருத்தமாக அமைந்தால் மட்டும் போதாது. அஃது இயற்கைக்கும்' நடைமுறைக்கும் பொருந்தி வரல் வேண்டும். "தண்ணீர் கொண்டுவா", "தேநீர் வேண்டும்" என்று கேட்ட மறுநொடியே அவை வந்துவிடுகின்றன. மடலைக் கையில் வாங்கியவுடனேயே அதன் உள்ளடக்கம் தெரிந்து விடுகின்றது. இவையெல்லாம் நடைமுறைக்குப் பொருந்தாதவை: வழக்கு மன்ற நிகழ்ச்சிகளும் முடிவும் இவ்வாறே. இவைபோல் பல குறைகள். இனி நாடகங்கள் எழுதுமுன் ஆசிரியர். அடிப்படை நிலைகளையேனும் செப்பமாக அமைக்க வேண்டுகின்றோம்.

நூல் எழுதும் இளைஞர்கள் திறமையில் வளர்ந்து தமக்குப் போட்டியாக வந்துவிடுதல் கூடாது என்பதுதான் இன்றைய அணிந்

நூற்சுருக்கம்

பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்.

மொழிநூற் பேரறிஞர் பண்டித, புலவ, கலைத்தலைவர்.
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

மேலையாரியக் கலப்பெயர்கள் :

கலங்கள் முதன்முதல் தமிழகத்திலேயே செய்யப்பட்டன. அதனால், பல கடல் துறைச் சொற்களும், கலத்துறைச் சொற்களும், மேலையாரியத்திலும் கீழையாரியத்திலும் தமிழாயிருக்கின்றன.

வாரி — நீர், பெரிய நீர்நிலையான கடல். L. More.
Skt. Vari (வாரி).

முன்பக்கத் தொடர்ச்சி.

துரையாளர்களின் உள்ளக் கிடக்கையாயிருக்குமோ என்பது தெரியவில்லை. நூல் எழுதுவார் தம் குறைகளை உணராமல் போகும் வகையில் அவர்க்கு அளிக்கப்படும் மயக்க மருந்தாகவே இன்றைய அணிந்துரைகள் எல்லாம் உள்ளன. மிகைப் புகழ்ச்சி அணிந்துரையாகாது. அஃது இளைஞரை ஊக்குவிப்பதும் ஆகாது. கல்லூரியில் ஓரிரு மாதங்கள் கற்கு முன்பே பட்டங்களை வழங்கி விட்டால் பின் கடுமையாக உழைத்துக் கற்கவேண்டிய தேவை என்ன இருக்கின்றது ?

இலக்கியம் உள்ள உணர்வுகளின் முழுமலர்ச்சியும் செப்பமான வடிவமைதியும் உடையதாயிராமல் தரம் தாழ்ந்து வெறும் அச்சுநூல் வாணிகமாக மாறி விடுவதற்கு இத்தகைய தாராள(!) அணிந்துரையாளர்களும் ஒரு காரணம் என்று துணிந்து கூறலாம். இந்நூலுக்கு பர். பேரா. இலக்குவனர் அவர்கள் வழங்கியுள்ள அணிந்துரையைக் காண்போர் இதனைத் தெரிந்துகொள்ளல் கூடும்.

" கல்லாடன் "

வாரணம் — கடல். L. Marinus. E. Marina.
Skt. Varuna. (வாருண).

வார்தல் – நீள்தல். வார் – வாரி. ஒ. நோ. நீள் – நீர்.
வார் – வாரணம் — பெரிய நீர்நிலை அல்லது விளைந்த நீர்நிலை.

கரை — கடற்கரை. E. Shore. C(k)-sh.
ஒ. நோ. L. curtus. E. short. படகு. LL. barca. Gk. baris
E. bark. ML. barga. variation of barca. E. Barge.

ட – ர – ஒ. நோ. பட்டடை – பட்டரை. படவர் – பரவர்.
கொடுக்கு – ME, Croc. ON. Krokr E: crook.
குடகு E. coorg.

நாவாய் — L. Navis Gk. Naus. Skt Nau. E. Navy.
நாவுதல் – கொழித்தல், நாவாய் – கடல் நீரைக் கொழித்துச் செல்வது.

கப்பல் L. Scapha. Gk. Skaphos. German Schiff.
OHG. Scif. OS. ON. Ice, Goth. Skip. OE Scip. esquif.
Sp., Port. – Esquife. It. Schifo. E. Skiff ship:

கப்புகள் (கிளைகள்) போன்ற பாய்மரங்களை உடையது கப்பல். L. Galea, Gk Galaia, E. Galley. galleon முதலிய சொற்களும் கலம் என்னும் தென்சொல்லோடு ஒப்பு நோக்கத் தக்கன.

OS OE, Segel, OHG. segal, ON. Segl E. Sail என்னும் சொற்களும் சேலை என்பதை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

நங்கூரம். L. Ancora. Gk. Angkyra Fr Ancre E anchor.
Pers. Langar. கவடி. E. Cowry.

மேனுடுகட்கு ஏற்றுமதியான பொருட்பெயர்கள்:

தோகை (மயில்) Heb Tuki Ar. tavus. L. Pavus.
E. Pea(coch,h)
அரிசி. Gk. L. Oruza. It riso. OF. aris E. rice.
இஞ்சிவேர் – Gk. Ziggiberis L. Zingiber.
OE. gingiber E. Ginger.
Skt. – Surungavera..

இஞ்சிவேர் என்பது தெளிவாக இருக்கவும், வடமொழியாளர் (ச்ருங்க–கொம்பு. வேர – வடிவம்) மான்கொம்பு போன்றது என்று தமிழரை ஏமாற்றியது மன்றி, மே லை ய ரை யு ம் மயக்கியிருப்பது வியக்கத் தக்கதே.

இஞ்சுதல் – நீரை உள்ளிழுத்தல்.

திப்பிலி – Gk peperi L. piper E. pepper. Skt. pippali.

பன்னல் – (பருத்தி) L. punnus, cotton. It. panno, cloth

கொட்டை (பஞ்சுச் சுருள்) Ar. qutun. It. cotone.

Fr. coton. E. cotton.

கொட்டை நூற்றல் என்பது பாண்டிநாட்டு வழக்கு.

நாரந்தம் (நாரத்தை) Ar. Pers. n a r a nj Fr., It, arancio. E. crange.

குமரிக்கண்டத் தமிழ்க் கலவரும், கடலோடிகளும் உலகமுழுதும் கலத்திற் சுற்றினமை வடவை (Aurora Borealis) என்னும் சொல்லாலும், தமிழர் கடல் வணிகத் தொன்மை,

'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை'

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் உணரப்படும்.

அரசியல் :

முதற்காலத்தில், முழுகிப்போன குமரிக்கண்டம் மு ழு வ து ம் பாண்டிநாடாகவும், குமரிமுனை முதல் பனிமலை வரையும் குடபாதி சேரநாடாகவும் குணபாதி சோழநாடாகவும் இருந்தன- பழம்பாண்டி நாடு, தென்பாலி நாடுமுதல் கு ம ரி யா று வ ரை எழுநூறு காதம் (2100 கல்) நீண்டிருந்தது. பாண்டியன் அதை இழந்தபின், பிற் காலத்துப் பாண்டிநாடாகிய நெல்லை. மதுரை முகவை மாவட்டப் பகுதியைச் சோழநாட்டினின்றும் கைப்பற்றியாண்டான்.

பாண்டியன் ஐந்துணையரசரைக்கொண்டு ஆண்டதால் பஞ்சவன் எனப்பட்டான். அஞ்சவன் என்ற சொல்லே பஞ்சவன் என்று திரிந் திருத்தல் வேண்டும்.

ஒப்புநோக்கு : அப்பளம் – பப்படம். அப்பா – E. papa

சவை என்னுஞ் சொல்.

அமை – அவை. ஒ. நோ. அம்மை – அவ்வை. குமி – குவி. அமைதல் – கூடுதல் அமை – கூட்டம். ஒ. நோ. இமை – குமை. (வ)

அவை – சவை – சபா (வ) ஒ. நோ. வடவை வடவா. (வ) — படபா. (வ).

அரசன் தலைநகரிலிருந்து ஆண்டுவந்தான். அரசனுக்குக் காவல் தொழிலே சிறப்பாதலாலும், காவலன் புரவலன் என்னும் பெய ருண்மையானும், அரசு என்பது அரண் என்னும் சொல்லிற்கு இன மாய், பாதுகாப்பு அல்லது காவல் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகத் தெரிகிறது. அரசு – அரசன்.

Gk. Archon. L. Rex. regis. Skt. rajan.

அரசன் – அரைசன் – அரையன்–ராயன் (கொச்சை) ராயலு(தெ)
E roy – King. as in Viceroy ME. royal (adj)
F OF. roiyal.

வேய்ந்தோன் – வேந்தன். வேய்தல் – முடியணிதல்
கொன்றைவேய்ந்தோன் – கொன்றைவேந்தன்.

அமைச்சர் – அரசியல் வினைகளை அமைப்பவர். அல்லது அரசனுக்கு நெருங்கியிருப்பவர்.

போற்றியர் – தமிழப் பூசாரியர்.

தூதன் – முன்செல்பவன் என்று பொருள்படும் தென்சொல்.

அமைச்சர், போற்றியர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் என்பவர் ஐம்பெருங்குழுவார்.

கணக்கர் கருமத்தலைவர், பொன்சுற்றத்தார் அல்லது பொக்கச் சாலையர், வாயிற்காவலர், நகர மாந்தர், படைத் தலைவர், குதிரை மற வர் – எண்பேராயத்தார். ஆருயிர் நண்பர், அந்தணர், சமையற்காரர், மருத்துவர், கணியர் – உறுதிச் சுற்றத்தார்.

அறிவாலும் அகவையாலும் மூத்த பெரியார் முதுகண் எனப் படுவர்.

கல்வி.

கற்பிப்போர், கணக்காயன் என்றும், ஆசிரியன் என்றும், குரு அல்லது குரவன் என்றும் மூவகையர். கணக்காயன், எழுத்தும் சிற் றிலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டும்) கற்பிப்போன். ஆசிரியன் பிற்காலத்தில் ஐந்தாக விரிக்கப்பட்ட மூவிலக்கணமும், பேரிலக்கிய மும் கற்பிப்போன். குரவன் சமயநூலும் பட்டாங்கு (தத்துவ) நூலும் கற்பிப்போன்.

ஐயன் – ஆயன் – ஆசிரியன்.

ஆயன் – ஆயான் – தந்தை தமையன்.

ஆயான் – ஆசான்,

ஆசாள் – ஆசிரியன் மனைவி.

ஆசு + இரியன் – ஆசிரியன் — குற்றம் நீங்கியவன் அல்லது குற்றம் கெடச் சொல்பவன்.

குரு

1. பருமன்
2. கனம்
3. பெருமை
4. அரசன்
5. ஆசிரியன்
6. தந்தை.

குரு – குருசில் – குரிசில் – பெருமையிற் சிறந்தோன், தலைவன்.

குரு – குருவன் — சமயவாசிரியன்.

ஒ. நோ. சிறு — சிறுவன்

குருவன் – குரவன் — பெரியோன். குரு தென்சொல்லே!

இசைக்கலை

குமரிக் கண்டத் தமிழர் ஏழு பேரிசையும், ஐந்து சிற்றிசையுமாகிய பன்னீரிசையை (சுரத்தை)யும் கண்டு ஆயப்பாலை என்னும் முறையில் எழுபாலைப் பண்களைத் திரித்ததுமன்றி, அப் பன்னீரிசையையும் வட்டப்பாலை என்னும் முறையில் 24 ஆகவும், திரி கோணப்பாலை என்னும் முறையில் 48 ஆகவும், சதுரப்பாலை என்னும் முறையில் 96 ஆகவும் நுட்பமாய்ப்பகுத்தனர். ஏழிசைக்கும் பெயரிட்டனர். சிற்றிசை ஆகணம் என்றும், குரலும் இளியுமல்லாத பேரிசை அந்தரம் என்றும் சொல்லப்பட்டன. திரி, சதுரம் என்னும் சொற்கள் தமிழே. (விளக்கம், என் வடமொழி வரலாற்றில்).

நாடகம்

நாடகம் என்பது தென்சொல்லே. நள்ளுதல், பொருந்துதல், ஒத்தல், நள் – நளி. நளிய என்பது ஓர் உவம உருபு. நளிதல் – ஒத்தல். நளி – நடி. ஒ. நோ. களிறு — கடிறு.

நடி – நடம் – நட்டம் – ந்ருத்த – (வ)
ஒ. நோ. வட்டம் – வ்ருத்த. (வ)
நட்டம் – நட்டணம் – நட்டணை.
நட்டம் – நட்ட (பிரா)
ஒ. நோ. வட்டம், – வட்டணம், வட்டணை
நட்டணம் – நர்த்தன (வ)
நட்டம் – நட்டுவன். ஒ. நோ குட்டம் – குட்டுவன்.
நடி – நடனம். ஒ. நோ. படி – படனம் — படிப்பு.
நடி – நாடகம். – ஒ. நோ. படி – பாடகம் — பாதத்திற்படிந்து கிடக்கும் அணி.

குதித்தாடுவது கூத்து. நடனம் அல்லது நடம் என்பது அழகுற ஆடுவது. தமிழ் நடனம் இன்று பரதநாட்டியம் என்று வழங்குகின்றது. பரத சாத்திரம் வடமொழியில் இயற்றப்பட்டது கி. மு. 4-ஆம் நூற்றுண்டாகும். அதற்கும் முந்தியது தமிழ்ப் பரதமே என்பதை, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வுரைப்பாயிரத்தால் அறிக.

அர் – அரங்கு — அறை, அரங்கு – அரங்கம் — நாடகமேடை, நாடகசாலை, விளையாடிடம், படைக்கலம் பயிலுமிடம். போர்க்களம், ஆற்றிடைக் குறை, திருவரங்கம்.

மருத்துவம்: தமிழ் மருத்துவக்கலை சித்தரால் வளர்க்கப்பெற்றது. இந்திய மருத்துவம் சித்த மருத்துவமே. ஆயுர்வேதம் எனும் ஆரிய மருத்துவம் சித்த மருத்துவத்தின் வடநாட்டு வகையே. சேரவேந்தர் இருந்தவரை சித்த மருத்துவமாயிருந்த மலையாள மருத்துவம் இன்று ஆரிய மருத்துவமாய் மாறியிருத்தல் காண்க.

கட்டிடம் : மாளிகை, கோபுரம், மணி, மண்டபம் என்னும் நாற்சொல்லும் தென் சொல்லே.

மாலுதல் – மாண்புறுதல். மால் (மாள்) மாள் – மாளிகை.
கோ – அரசு. தலைமை. புரம் — உயர்வு, உயர்ந்த கட்டிடம்.
புரை - உயர்ச்சி, புரை உயர்பாகும் (தொல் உரி 4)

கோபுரம் உள்ள நகர்களின் பெயர்களே முதலில் புரம் என்னும் ஈறு பெற்றன.

புரம் முதலில் அரண்மனையின்மேல் எழுநிலை கொண்ட ஓர் உயர்ந்த தேர் போன்ற கட்டிடத்தைக் குறித்தது.

பின்பு, புரத்தைக் கொண்ட அரண்மனையையும் அதன் சூழலையும் (Acropolis) குறித்தது. பின் தலைநகர் முழுவதையும் குறித்தது. நாளடைவில் நகரப் பொதுப்பெயராயிற்று.

மணி – மண்ணுதல், அல்லது மள்குதல் என்னும் வினையினின்றும் தோன்றியது.

மண்டகம் – மண்டுதல் அடியாகப் பிறந்தது.

மண்டு - அகம் – மண்டகம். (தொடரும்)

அன்பளிப்புகள்.

1. கோவைத் தொழில் அறிஞரும், அறிவியல் வல்லாருமான உயர்திரு. கோ. துரைசாமி (G. D. NAIDU) அவர்கள் தென்மொழி வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் காட்டி வாழ்த்தி அன்பளிப்பாக அண்மையில் உருபா இருநூற்றைம்பது விடுத்துள்ளார்கள். அவரின் அருள் உள்ளத்திற்கும் தமிழ்த் துணைக்கும் வணக்கமும் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

2. தென்மொழியுறுப்பினரும் தமிழன்பரும் ஆன உயர்திரு. போ. தே. ப. தங்கவேலு பி. இ. இளம்பொறியாளர்; சோலையாறு அணை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி சுந்தரம்பாள் அம்மைக்கு மேழம் மாதம் பிறந்த ஆண்மகவு நினைவாக, அப்பெற்றோர் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா இருபது அன்பளிப்பாக விடுத்துள்ளனர். தங்கவேலு - சுந்தரம்பாள் தம் தமிழ் மகன் மூவா இளமைத் தமிழ் மொழிபோல் நாளும் வளர்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் மன்பதைக்கும் தொண்டு புரிந்து சிறக்க வாழ்த்துகின்றோம்.

3. தென்மொழியன்பரும் தனித்தமிழ்த் தொண்டருமான உயர் திரு. தரங்கை. பன்னீர்ச்செல்வன் அவர்களின் துணைவியார்க்கு தி. பி. ௧௯௯௭ ஆனி ௨ (16—6—66) அன்று மகன் ஒருவன் பிறந்து, அக்குழந்தைக்குத் ‘தென்மொழிச் செல்வன்’ எனப் பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழிக்கு உருபா ஐந்து அன்பளிப்பாக அளிக்கப் பெற்றது: தென்மொழிச் செல்வன் வைகலும் வளர்ந்து அவையத்து முந்தியிருந்து தமிழ் வளர்க்க வாழ்த்துகின்றோம்.

(அமைச்சர்)

தமிழ் - பெயர் விளக்கம்.

தமிழ் என்ற பெயரின் சொல்விளக்கம் இன்னும் தெளிவாக அறியப் பெறவில்லை. ஒருசிலர் தமிழ் என்பதற்கு 'வேறெம் மொழியிலும் இல்லாத 'ழ்' என்ற எழுத்தைத் தம்மில் கொண்டது' என்றும், சிலர் 'இனிமை' என்று பொருள்படும் 'தமிழ்' என்ற சொல்லையே இம்மொழியின் பெயராகக் கொண்டனர் என்றும், கற்பித்துக்கூறுவர். ஆனால் இரண்டும் தெளிவான – அறிவுக்குப் பொருந்துவதான விளக்கமாக இல்லை. ஏனெனில் முன்னைய கருத்து, 'உலகில் உள்ள மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்னே வைத்துக்கொண்ட பெயர்' என்பதாகப் பொருள் தருகின்றது. இரண்டாவது கருத்து, 'ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள் தம் மொழியைப் பற்றிப் பெருமையாகவே கூறிக்கொள்வார்கள்' என்பதையே புலப்படுத்துகின்றது.

ஒருவர் வீடு அல்லது ஒருவர் நாடு என்று பொருள்படும் தம்–இல் என்ற கூட்டுச் சொற்களின் பொருள் திரிந்த வடிவமே தமிழ் என்றுநின்றது என்பதே அறிவுக்குப் பொருந்துவதான ஒரு முடிபாகும். தொடக்கத்தில் இது 'மொழி' என்னும் சொல்லுக்கு முன்னொட்டாக நின்று, தம் - இல் – மொழி என்று வழங்கி 'ஒருவர் வீட்டில் அல்லது நாட்டில் வழங்கும் மொழி' என்று பொருள் பெற்றிருத்தல் வேண்டும். பின் தாய்நாட்டு மொழி என்றும் அம்மொழி வழங்கும் நாடு அல்லது தேயம் என்றும் பொருள் பட்டிருத்தல் வேண்டும். இம்மொழி வழங்காத அயல் நாடுகளை 'மொழி பெயர் தேயம்' என்று மொழியடிப் படையில் பெயர் குறிக்கும் முறை தமிழகத்தில் இருந்தது. மொழி பெயர் தேயம் - மொழி மாறுபடும் நாடு அல்லது மாறுபட்ட மொழி வழங்கும் நாடு. இவ்வழக்கு காலப்போக்கில் மாறி மொழியையே தனிப்படக் குறிப்பதாகி தம் - இல் - மொழி — தமில் மொழி – தமிழ்மொழி என்றும் பின் 'தமிழ்' என்றும் திரிந்து வழங்கப் பெற்று வருகின்றது. ல் – ழ் ஆவது தமிழில் பொதுவான வழக்கு மால் - மல் - மலை - மழை (முகில் - மழை) கல் - காள் - காழ் (கருமை).

ஞா. தே.

வேதியல் :

ஊடாப் பொருட்கள் (COLLOIDS)

ஆ. நேசமணி (இந்துக் கல்லூரி, நாகர்கோவில்)

அறிவியலறிஞர் கிரகாம் நீர்மைப் பொருட்களின் ஊடுருவலைப் பிரித்தாயும் பொழுது, சில நீர்மங்கள் உடனே மென்றோல் (membrane) வழி ஊடுதலையும் சில ஊடாமல் தங்கி விடுவதையும் கண்டறிந்தார். முதலிற் கூறியவை பெரும்பாலும் படிக நிலையிற் காணப்படுவதால் அவை படிகப் பொருட்கள் (crystalloids) எனப் படுகின்றன. பின்னால் கூறியவை படிக நிலையிலில்லை; மாருகப் பொடிகளாகத் (amorphous) தோற்றமளிக்கின்றன. அவை மெழுகு போன்று ஊடாதமைந்தமையால் கிரகாம் அவற்றை ஊடாப்பொருட்க (colloids) ளென்று அழைத்தார். எடுத்துக்காட்டுகள்: மாப் பொருள் (starch), முட்டை வெள்ளை போன்றவை. பின்னால் செய்யப் பட்ட ஆய்வுகள் பலவும் இப்பாகுபாடு சரியன்று என்பதைக் காட்டின. ஏனென்றால் சில படிகப் பொருட்களும் ஊடாக் கரைசலை ஏற்படுத்தின. இன்னும் சில பொருட்கள் இரு திறத்திலும் செயற்பட்டன. இந் நாட்களில் ஊடாப் பொருட்கள் என்று குறிப்பிடப்படாமல் அவற்றின் நிலையே (colloidal state) பேசப்படுகிறது.

"தொங்கும் பொருட்களின் தோற்றத்திற்கும் கரையும் பொருட் களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட தோற்றத்திலிருக்கும் பொருட் களே உண்மையான ஊடாக் கரைசலை உண்டாக்குகின்றன."

ஊடாப் பொருட்களை ஆக்கும் முறை :

பெரும்பான்மை ஊடாப் பொருட்களும் மின்பிரிவை (electrolytes) களின் முன்னால் நிலையாக நிற்பதில்லை. ஆகையின் ஊடாக் கரைசலை ஆக்குதற்குப் பயன்படும் பொருட்கள் யாவும் தூய்மையாக வும், மின் பிரிவைகளல்லாதனவாகவும் இருக்கவேண்டும்.

கஞ்சி, வேலம்பசை (gum arabic) போன்றவை நீரிற் கரைந்ததும் ஊடாக் கரைசலைத் தந்துவிடுகின்றன. இவை கரைப்பான் விரும்பி (lyophilic colloids) ஊடாப் பொருட்கள் எனப்படுவ. மற்ற ஊடாப் பொருட்கள் தனிப்பட்ட முறைகளால் ஆக்கப்படுகின்றன. அவைகளாவன. (அ) குளிர்வை முறைகள் (condensation

methods), (ஆ) சிதறு முறைகள் (dispersion methods) என இருவகை முதன்முறைகளால் சிறிய பொருட்களினின்றும் இரண்டாம் முறைகளால் பெரும் பொருட்களை உடைத்துச் சிதறச் செய்தும் ஊடாப் பொருட்கள் ஆக்கப்படுகின்றன.

அ. குளிர்வை முறைகள் :

(க) வேதியல் முறைகள் (chemical methods) :

(1) தீயாக்க முறை. (By oxidation) : கந்தக இருதீயை (SO_2) நீரகக் கந்தகத்துடன் (H_2S) செலுத்தும்பொழுது, ஊடாத கந்தகம் கிடைக்கிறது. ($2H_2S + SO_2 > H_2O + 3S$).

(2) தீக்குறைப்பு முறை (By reduction) : மாழைஉப்புக்கரைசல்கள் (metallic salt) நீர்த்தீ நீரணை (hydroxylamine), வெள்ளீயப்பாசியம் (stannous chloride) போன்றவற்றால் ஊடாக்கரைசல்களாகக் குறைக்கப்படுகின்றன. எ.கா: பொற்பாசியம் (auric chloride) நீர்த்தீ நீரணையால் குறைக்கப்படும்பொழுது ஊடாப் பொற்கரைசல் கிடைக்கிறது.

(3) நீர்த்தல் முறை (By hydrolysis) : இருப்புப் பாசியம் (Ferric chloride) நீருடன் கலக்கப்படும்போது இருப்பு நீர்த்தீ (Ferric hydroxide) கிடைக்கிறது.

($Fecl_3 + 3H_2O > Fe(OH)_3 + 3H\ cl$).

(4) இரட்டைச் சிதைவுமுறை : (By double decomposition) நீரகக் கந்தகத்தை நஞ்சத்தீக் (Arsenic oxide) கரைசலிற் செலுத்துகையில் ஊடா நஞ்சக் கந்தகம் கிடைக்கிறது. ($AS_2O_3 + 3H_2S > AS_2S_3 + 3\ H_2\ O$).

(உ). கரைப்பான் மாற்று முறை (By exchange of solvent) :

"ஒரு பொருள் 'அ' என்னும் கரைப்பானில் மிகக் கரைவதாயும், 'ஆ' என்னும் கரைப்பானில் கரையாததாகவும் இருந்தால் 'அ' பொருளின் கரைசலை (solution) 'ஆ' கரைப்பானில் கரைக்கும் பொழுது 'ஆ' பொருளின் ஊடாக் கரைசல் கிடைக்கிறது." (எ. கா.) சாராயத்திற் கரைந்த கந்தகத்தை நீரிற் கலந்தால், நீரில் கந்தகத்தின் ஊடாக் கரைசல் கிடைக்கிறது.

ஆ. சிதறு முறைகள் :

(க) பொறிகளால் (By machines) : நீரில் களிமண்ணின் ஊடாக் கரைசல், அதனை நாற்றிசையும் விரைவாகச் சுழலும் மாழைத் தட்டு (metallic discs) களுக்கிடையே செலுத்திச் செய்யப்படுகிறது. எ. கா: இந்திய மை (Indian ink) விளக்குக் கரியை (lampblack) பசை (gum) சேர்க்கப்பட்ட நீரில் அரைத்துச் செய்யப்படுகிறது.

(உ) பிரிடிக் வில் முறை (Bredig's arc process) :

பொன், வெள்ளி, நரையம் (Platinum) போன்ற மாழைகளின் ஊடாக் கரைசலைச் செய்ய இம்முறை பயன்படுத்தப்படுகிறது. இரண்டு மாழைத் தண்டுகள் (metallic rods) பனிக் குளிர்ச்சி (ice cold) செய்யப்பட்ட நீரின் கண் வைக்கப்பட்டு அவற்றினிடையே மின்வில் (eletric arc) தோற்றுவிக்கப்படுகிறது. மாழைகளின் துகள்கள் (particles) தண்டுகளினின்று பிரிந்து கரைசலை அடைகின்றன.



மி: மின் வில்
ப: பனிக் கட்டிகள்

(ந) வெண்ணீலக் கதிர்களின் செயல்களால் (By the action of ultraviolet rays) :

இம்முறையால் மிகுந்த பயனுடைய, பொன், செம்பு, (copper) காரீயம் (lead) போன்ற மாழைகளின் ஊடாக் கரைசல்கள் சிதறூடக (dispersion medium) த்தில் – நீரில் – அமுக்கப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகின்றன.

சில ஊடாப் பொருட்களைச் செய்தல் :—

(1) **நஞ்சக் கந்தகம்** (Arsenious sulphidle) :

ஒரு விழுக்காடு (%) நஞ்சத்திக் கரைசலில் நீரகக் கந்தகம் நெடுநேரம் – மாற்றம் உறுதியாகும் வரை – செலுத்தப்படுகிறது.

முடிவில் அதிகப்படியான நீரகக் கந்தகம், நீரக ஓட்டத்தால் வெளியேற்றப்படுகிறது. மஞ்சள் நிறத்துடன் கூடிய ஊடாக் கரைசலாகிய நஞ்சக் கந்தகம் நமக்குக் கிடைக்கிறது.

(2) மண்காடி (Silicic acid):

உவரிய மண்தீ (sodium silicate) யுடன் நீரேற்றிய நீரகப் பாசியக்காடி (dil. Hcl acid) யைக் கூட்டும்பொழுது மண்காடி ஊடாக் கரைசல் கிடைக்கிறது.

$$[Na_2 Sio_3 + 2 Hcl > 2 Nacl + H_2 SiO_3]$$

எஞ்சிய நீரகப்பாசியக் காடியும் உவரியப் பாசிகமும் (Nacl) மென்றோல் பகுப்பு (dialysis) முறையால் வெளியேற்றப்படுகின்றன.

மென்றோல் பிரிவைக் (dialyser) கண்ணாடியாலான, அடிப்பாகம் மென்றோல் (parchment paper) கட்டப்பட்ட, உருள்கலனைக் கொண்டுள்ளது. நீரேற்றிய கரைசல் கலத்தில் விடப்பட்டுக் கலன், நீர் தாங்கிய மற்றொரு கலனில் வைக்கப்படுகிறது. அக்கலனில் அடிக்கடி நீர் மாற்றப்பட்டுப் புதிய நீர் விடப்படுகிறது. உவரியப் பாசியமும், நீரகப் பாசியமும் மென்றோல் வழியாக ஊடிச் செல்லும்பொழுது, மண்காடி மட்டும் கலன் 'க' வில் தங்கிவிடுகிறது. மென்றோல் பிரிப்பாவது ஊடாப் பொருளைப் படிகப்பொருட்களினின்றும் பிரிப்பதாகும்.



மெ: மென்றோல். க: கலன்
அ: தூய்மையற்ற ஊடாக்கரைசல்

(3) மென்றோல் பிரித்த இரும்பு (dialysecl iron):

இது நேர்மின் (+ ve charge) திணிக்கப்பட்ட இரும்பு நீர்த்தீயல்லால் பிறிதில்லை. இஃது ஊடாததாக்கு (Peptisation முறையால் தோற்றுவிக்கப்படுகிறது. இரும்பு நீர்த்தி போதுமான

அளவு இரும்புப் பாசியத்துடன் கலக்கப்படும் பொழுது அது கிடைக்கிறது. மிகுதியான இரும்புப் பாசியம் மென்ரேல் பகுப்பு முறையால் வெளியேற்றப்படுகிறது.

ஊடா நரையம் (colloidal platinum):

இது பிரிடிக் வில் முறையால் செய்யப்படுகிறது. இரண்டு நரையத் தண்டுகள் வெடிய நீர்த்தீ (Potassium hydroxide) கலந்த நீரில் அழுக்கப்படுகிறது. நீர் தாங்கிய கலம் பனிக்கட்டி நிரம்பிய மற்றொரு கலத்தில் வைக்கப்படுகிறது. நரையக் கம்பிகள் இரண்டும் ஒன்றிற்கொன்று ஒன்று அல்லது இரண்டு கீழ் நூறுகோல் (centi-metre) இடைவெளி இருக்கும் வண்ணம் பிரிக்கப்பட்டு அவை வழி நேரடியின் (direct current) செலுத்தப் படுகிறது. இம்மின்னோட்டத்தின் காரணமாக நரையத் துகள்கள் ஊடாக் கரைசலுக்குள் செல்கின்றன. கரைசலை வடிகட்டினால் பழுப்பு நிறத்தில் ஊடா நரையக் கரைசல் கிடைக்கிறது. பொன், வெள்ளி இவற்றின் ஊடாக் கரைசல்களும் இவ்வாறே செய்யப்படுகின்றன,

ஊடாப் பொருட்களின் இயல்புகள் :—

(க) பன்னிலைத் தன்மை (Heterogenity):

புறப்பெருக்குக் கண்ணுடி (Ultra-microscope) யின் உதவியால் சிக்மாந்தி (Zigmondy), சீதென்தோபு (Siedentopf) ஆகியோர் ஊடாக் கரைசல்களின் பன்னிலைத் தன்மையை எடுத்துக் காட்டினர். ஊடாக் கரைசல்கள் இருவேறு தோற்றத்தைக் கொண்டு தொடரூடகத்தில் சிதறப்பட்ட, நன்ருகப் பொடி செய்யப்பட்ட இந்தத் தூள்களைச் சிதறிய தோற்றம் (dispersed phase) என்றும் தொடரூடகத்தைச் சிதற்றூடகம் (dispersion medium) என்றும் கூறுவர். சிதறிய தோற்றம் கரைசலிற் காணும் கரை பொருளுக்கும், சிதற்றூடகம் அதன் கரைப்பானிற்கும் ஒப்புமையாவன. இந்த இரு தோற்றங்களும் பொருட்களின் முந்நிலைகளில் ஏதாவதொன்ருக இருந்துகொண்டு எண்ணிறந்த ஊடாப் பொருட்களை ஏற்படுத்துகின்றன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பொருட்கரைசலைக் கரையம் (sol) என்பர்.

(உ) ஊடெதிரழுத்தம் (Osmotic pressure):

ஊடாப் பொருட்கள் உயர்ந்த மூலக்கூறெடைகளைக் (molecular weights) கொண்டு விளங்குகின்றன. ஆகையால் அவற்றின் ஊடெதிரமுத்தம் மிகக் குறைவே.

(ங) தோற்றம் (size):

'தொங்கும் பொருட்களின் தோற்றத்திற்கும் கரையும் பொருட்களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட தோற்றத்திலிருக்கும் பொருட்களே ஊடாப் பொருட்கள்' என்று முன்பு கண்டோம். ஓர் ஊடாப் பொருட்டுகளின் விட்டமானது 6-லிருந்து 250 mu வரை. இங்கு mu — 10^{-7} கீழ் நூறு கோல் ஆகும்.

(௪) திந்தால் விளைவு (Tyndall effect):



திறன்மிகு கதிர்க் கற்றையொன்றை ஊடாக்கரைசல் வழிப் பாய்ச்சும்பொழுது, அக்கதிர் செல்லும் வழி நீல நிறமான ஒளிப் பட்டையாகக் காட்சியளிக்கிறது. இஃது ஊடாத்துகள்களினால் ஏற்பட்ட ஒளிச் சிதறலின் பயனாகும். வேதியலறிஞர் பாரடே (Farada) இவ்வுண்மையை ஊடாப் பொன் கரைசல் வழி ஒளியைச் செலுத்தியபோது கண்டறிந்து, அதற்குத் 'திந்தால் விளைவு' என்று பெயரிட்டார். நுண் பெருக்கி வழியாகக் கதிர்கள் சென்ற திசையின் நேர்கோணத்தில் பார்த்தபோது கிளரும் தன்மை வாய்ந்த துகள்கள் இருளில் ஒளிர் வதைப்போல் காட்சியளித்தன. நம் கண்களுக்குப் புலனாகும் அத் துகள்கள் உண்மையில் துகள்களல்ல; அவற்றால் சிதையப்பட்ட ஒளியேயாகும்.

(தொடரும்)

பொது நூலகங்களில் தென்மொழி வரவழைக்கக் கையொப்பங்கள் வாங்கி விடுத்துவிட்டீர்களா ?

அசைவுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அதனை முதன் முதலில் இராபர்டு பிரௌன் என்பவர் கண்டறிந்ததால் அது ‘பிரௌனியன் இயக்கம்’ எனப்படுகிறது. இது சிதறூடகத்தின் சிதறிய நிலைத் துகள்களின் இம்மிகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்வதாலே ஏற்படுகிறது. பெரிய துகள்களைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட மோதல்கள் ஏற்படாமையால் அதனிடத்துப் ‘பிரௌனியன் இயக்கம்’ செயல்படவில்லை. மூலக்கூறுகளின் (molecules) தோற்றம் இவ்வியக்கத்தின் வாயிலாக உண்மையாகிறது.

(௬) மின்னிழுப்புத் தன்மை (Electrophoresis):



மின்புலத்தின் தூண்டுதலால் ஊடாத் துகள்கள் ஏதாவதொரு மின் தண்டை அடைகின்றன. இவ்வியல்பே ‘மின்னிழுப்புத் தன்மை’ எனப்படுவது. முதலில் இது ‘எதிர் மின்னிழுப்புத் தன்மை’ என்றுதான் வழங்கப்பட்டது. இத்தொடர் எதிர் முன் தண்டைச் சென்றடையும் ஊடாத் துகள்களையே குறிப்பதால், சரியன்று. இம்மின்னிழுப்புத் தன்மையின் உதவியால் ஊடாத் துகள்களின் ஏற்பை (charge) அறிந்துகொள்ளவியலும். அத்துகள்கள் நேர்மின் தண்டை அடைந்தால் எதிரேற்பையும் (– ve charge), எதிர் மின் தண்டை யடைந்தால் நேரேற்பையும் உடையனவாகின்றன. ஆனால் நீர் சிதறூடகமாய் இருக்கும் ஊடாப் பொருட்களனைத்தும் எதிரேற்புடையனவே; அதாவது அவை நேர்மின் தண்டைச் சென்றடைகின்றன. மற்ற எதிரேற்புடையவை நிலவைகள், நிலவைக் கந்தகங்கள், மண்காடி, தூவல் மை போன்றவையும்; நேரேற்புடையவை இரும்பு நீரகத்தீ, மலிவெள்ளி நீரகத்தீ (Aluminium hydroxide), கவின நீரகத்தீ (chromium hydroxide) போன்றவையுமாம்.

மின்னிழுப்புத் தன்மை சிறப்பானதொரு தொழிற்பயனுடைய தாகும். இது புகையிலுள்ள தூய்மையைக் கெடுக்கும் பொடிகளை

பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன ? இங் கார்போற்றி ஞலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

யாவையுமே தமிழில் வேண்டும் ! — மணிவேலன்.

உண்கின்ற பண்டத்தில் மணல் கலந்தே
ஊரார்க்கு விற்போரைக் கள்வர் என்பீர்!
தண்ணீரில் அழுக்குநீர் சேர்ப்போர் நோயைத்
தாமாக வரவழைப்போர் என்பீர்! பெண்டிர்
கொண்டையிலே மல்லியுடன் எருக்கம் பூவைக்
கோத்து வைத்தால் 'வெறியுண்டோ?' என்பீர்! ஆனல்
தண்டமிழில் பிறமொழிச் சொல் கலந்தா லேதான்
தழைக்குமெனச் சொல்வோரை அறிஞர் என்பீர்!

மலரென்ற சொல்விடுத்து 'புஷ்பம்' என்ருல்
மடிந்ததன்ரே ஒரு தமிழ்ச்சொல்? 'அணி' யென் னுஞ் சொல்
கொலைபடவே 'ஆபரணம்' என்று சொன்ஞல்
குளிர்தமிழில் மற்ரெருசொல் இறந்த தன்ரே ?
தலைக்கொரு சொல் விழுக்காடு கொன்று போட்டுத்
'தருவித்துப் பிறமொழியைக் குந்த வைத்தால்
கலைவிளக்கும் தமிழ்ப்பயிரோ கருக வேற்றுக்
கள்ளியன்ரே ஊர்ந்துவிடும்! நினைத்துப் பாரீர்!

அப்பத்தை யொருகுரங்கு பகிர்ந்தளிக்க
அருமுயற்சி செய்வதுபோல் முழுதும் தின்ற
முப்பாட்டன் காலத்துக் கதையைப் போல
முழுத்தமிழை விழுங்கிவிட குரங்கு மாந்தர்
எப்போதும் முயல்கின்ருர்! மயங்க வேண்டா;
எவன் சொன்ன போதிலும்நீர் நம்ப வேண்டா;
குப்பத்துச் சேவலென நிமிர்ந்து கூவும்
கொள்கையிலாக் கட்சிகளை நம்ப வேண்டா.

பாரிலுள தமிழரிங் கொன்று சேர்விர்!
பைந்தமிழின் நூலெல்லாம் மொழிபெயர்த்தே
ஊர்ந்துசென்று கருமுகிலே பொழிதல் போல
உம்மொழியின் சிறப்பெல்லாம் பரப்பல் வேண்டும்.
சீர்பெற்ற தமிழ் கற்கப் பிறநாட்டார்கள்
செந்தமிழர் நாடதனில் திரளல் வேண்டும்.
தேரிழுக்கக் கூடுகின்றீர்! தேனில் தோய்ந்த
செந்தமிழைக் காப்பதற்கோ திரள மாட்டீர்?

படிக்கின்ற கலையெல்லாம் தமிழில் வேண்டும்!
பயிற்றுமொழி தமிழென்றால் வேப்பங்காயைக்
கடிக்கின்ற பிள்ளைபோல் முகம் சுளிப்போர்
கன்னத்தில் அறைந்தவர்க்கே உணர்த்தல் வேண்டும்!
கொடுக்கின்ற பட்டமெல்லாம் தமிழில் வேண்டும்!
குறைவில்லாக் கலைச் சொற்கள் தமிழில் வேண்டும்!
மிடுக்கோடு நாமெல்லாம் வாழ வேண்டின்
மெய்யாக யாவையுமே தமிழில் தேண்டும்!

——

தமிழ் ஊடல்

இமயத் தமிழன், சென்னை—35

மல்லிகைவெண் மலர்சுமந்து மயக்கும் வண்ண
மலர்விழிக்கு மையெழுதி, மணக்கும் முல்லைப்
பல்லெடுத்துக் காட்டுகின்ற பவளப் பேழை
பளபளக்க, பனிமுகத்தில் பண்பைத் தேக்கி,
அல்லிருக்கும் குழலாட அசைந்து வந்தே
அன்னம்போல் அருகமர்வாள் என்றே எண்ணிச்
சொல்லெல்லாம் வைத்திருந்தேன்; வந்தாள் இன்பம்
சுழித்தோடும் என்றிருந்தேன்! அமைதி யானாள்!

தள்ளாடும் கதவருகே தளிர்ப்பெண் நின்றாள்!
“தயக்கம் ஏன்? வா.”என்றேன் வந்தா ளில்லை
உள்ளாடும் உவகையினை இனியும் தேக்க
ஒருநொடியும் ஒல்லாதென் றோடி அந்தக்
கள்ளாடும் குழலாளின் கைப்பி டித்தேன்!
கரும்பாம்பைப் போலுயிர்த்துக் கனல்உ மிழ்ந்தாள்
முள்ளாடும் தமிழகத்தை மாற்றா தின்ப
முதலிரவைத் துய்ப்பதுவும் முறையோ? என்றாள்

''வாள்வலியும் தோள்வலியும் காட்டி இந்த
வையகத்தை ஆண்டவர்தம் இளையோர் கூட்டம்
முள்சினத்தால் செந்தமிழை அழிக்கப் பாயும்
மொழிப்பகையைக் குழிபுதைக்கத் துடிக்கும் போழ்தில்
வாள்நெடுங்கண் எண்ணுமல், வாழ்வெண்ணுமல்
வந்தயிளம் படைதனக்குத் தலைமை தாங்கித்
தூள்பறக்கப் பகைவிரட்டி மீண்டால்; அன்றே
தோகைக்கு முன்வரலாம்" என்றுள் நின்றேன்.

நீயும் நானும்! பழனியூரான், சோழமாதேவி.

எட்டுத் திசையெங்கும் பட்டுத் தவழ்கின்ற
வட்டநி லவன்றோநீ – உயிர்
விட்டுப் பிரியினும் தொட்டு விளையாடும்
சிட்டுஉ ருவன்றோநான் ?

மொட்டு முகையொத்த பட்டு இதழினை
வெட்டும் அழகன்றோநீ – உனைக்
கட்டும் குறும்போடு எட்டிப் பிடித்தென்னில்
கட்டும ணமன்றோநான் ?

துள்ளி உடன்வந்தே எள்ளும் நகையோடு
விள்ளும் எழிலன்றோநீ – உன்
கள்ள விழியெல்லாம் கொள்ளை மகிழ்காண
அள்ளும் துணையன்றோ நான் ?

மண்ணில் விளைகின்ற பொன்னின் மணியென்ன
மின்னுபொ ருளன்றோநீ – உனைக்
கண்ணின் மணியென்ன எண்ணி எழுதிடும்
வண்ணத் தொடையன்றோநான் ?

உயிர்மெய்யாவோம் க. நெடுஞ்செழியன், குடந்தைக்கல்லூரி.

செய்யுளினில் இசைகுறைந்தால் கூட்டுதற்குச்
செப்பமுற 'அளபெடைகள்' போட்டே பாக்கள்
செய்யுமுறை வகுத்திடுவார் பாடல் வல்லார்!
செப்பறியாத் தேன்போலும் சுவையைக் கூட்ட

மெய்யதனில் என்வண்ணம் குறைதல் கண்டும்
மேகலையும் கைவளையும் ஓடல் கண்டும்
உய்யவிங்கோர் அளபெடையைப் போட வில்லை
உயர்புலவர் என்றீரே. என்ன வானீர்?

மெய்யாகச் சொல்லுகிறேன் அத்தான் என்னை
முன்பெற்றுர் ஏன்பெற்றுர் அறியேன் அந்தோ!
பெய்யாத வானத்தை நாளும் நோக்கிப்
பேதலித்துப் புலம்புகின்ற உழவன் போல
கையாற்று நிலையோடு புலம்பு கின்றேன்;
கையளவு இடையதுவும் கரையா முன்னம்
மெய்யோடு உயிர்சேர்க்க வருவீர்; நாளும்
மேன்மையுறு தமிழினுக்கே உயிர்மெய் யாவோம்!

குறுந்தொகைத் தமிழ்!

இரா. பவனந்தன், பி. எசி.,
திருவிடைமருதூர்.

குறுந்தொகையில் தமிழ்நடந்த வாறு – அவள்
குடமணைத்து தெருவோரம் நடந்தாள்!
சிறுமலர்கள் பெருமலரைப் பார்க்கும் – அங்கே
செவ்வல்லி அவளடியை நோக்கும்!

இறுகாத இளம்பாகைப் போல – அவள்
எழில்தோயத் தரைமீது கிடந்தாள்
கருங்குயில்கள் யாழ்என்று பாடும் – அங்கே
கன்னிக்கு மயிலெல்லாம் ஆடும்!

சில்லென்ற தென்றல்வரும் மோதும்! – அவள்
சேலைநுனி காற்றில்பறந் தாடும்!
மல்லிகைப்பூத் தொங்கல்மணம் வீசும்! – அவள்
மடிமீது தண்ணிலவு பேசும்!

தொல்லைதரும் மான்குட்டி பாயும் – அவள்
தூங்குவது பொய்த்தூக்கம் ஆகும்!
நல்லதமிழ்ப் பேரின்பம் சேரும் – ஆங்கே
நன்மலர்கள் கண்மூடிக் கொள்ளும்!

வேண்டுகை : ! புலவர் தி. நா. அறிவுஒளி.

தமிழரெனப் பேர்சொல்லித் தமிழர் நாட்டில்
தாழ்ந்தநிலை மாந்தர்கள் சழக்க ராக
அமிழ்கின்ற தாழ்நிலையை அறிந்திடாமல்
அடிவயிற்றைக் கழுவிடவே அலையுங் கூட்டம்
உமிழெச்சில் வாழ்வினிலே உழலக் கண்டேன்
உளமுருகிப் பதைத்தேன்நான் உள்ளம் நொந்தேன்.
தமிழினமே! தலைதூக்கித் தாழ்மை கொன்று
தனியாண்மை நிலைநாட்ட சாராய் கொல்லோ?

தமிழருக்குத் தமிழினமே பகையாய் நின்று
தாழ்ந்திழிந்த செயல் புரியும் நிலையைக் கண்டேன்.
தமிழகத்து வளர்ச்சிக்குத் தமிழர் தாமே
தடையாகத் திகழ்கின்ற கீழ்மை கண்டேன்!
தமிழுணர்ச்சிக் கெதிராகத் தமிழர் வந்து
தமிழழிக்கும் நிலைகண்டு உயிர்ப தைத்தேன்.
தமிழறிஞர் தமைப்போற்றி வளர்க்க எண்ணுத்
தடுமாற்றப் பேதைகாள்! சால்பு காப்பீர்!

நம்வளர்ச்சி மிகவேண்டும் ஞாலத் துள்ளே
நாட்டுணர்வும் நல்லறிவும் ஓங்க வேண்டும்.
செம்மைநெறி பண்டைபோல் செழிக்கவேண்டும்.
சீர்கழகக் காலம்போல் சிறப்பு வேண்டும்.
மும்மைசால் தமிழுக்குப் புவியி லெல்லாம்
முத்தான முதலிடமே வேண்டும்! வேண்டும்!
இம்மையிலே தமிழறிஞர் எங்கும் சென்றே
எழுச்சியொடு தமிழ் பரப்பி இயங்கல் வேண்டும்!

இயற்கைவழி வாழ்கின்ற இனிமை தன்னை
இழந்துவரும் இவ்வுலகம் இழிந்த பாழாம்
செயற்கைவழி வாழ்ந்தழிந்து சீர்மை கெட்டுச்
சீர்கேட்டைத் தழுவுகின்ற செப்பம் அற்ற
முயற்சிவழி தீதென்று முனைந்தே கூறி
முற்றுமவர் குற்றத்தை – முரணை – மாற்றி
அயற் கொற்கை வீழ்த்தியரும் தமிழர் பண்பை
ஆக்கமுறச் செய்திடவே தொண்டு வேண்டும்!

ஆர்வந்தான் தமிழர்க்கு ஆற்ற லாகும்!
ஆர்வத்தைத் தமிழுலகம் ஏற்க வேண்டும்!
ஆர்வமுடை முயற்சிகள் ஆக்கல் வேண்டி
ஆற்றல்சால் இளைஞர்தமை ஊக்கவேண்டும்!
சீர்புதுமைத் துறைதோறும் செயல்கள் ஆற்ற
சிறப்பார்ந்த அறிவியலில் மேலும் ஓங்கப்
பார் புதுமை அத்துணையும் பயன்ப டுத்தப்
பணிசெய்யத் திருக்கூட்டம் பரக்க வேண்டும்!

பாவேந்தன்!

உதயை மு. வீரையன்.

எழுதுங்கோல் பாட்டிசைக்கும்; ஏடுந்தான் பாடும்,
தொழுநோயர் கையும் துடிக்கும்; — விழுதுவிட்ட
ஆல்போல் வளர்ந்தே அருந்தமிழன் கேடயம் போல்
வேல்பொடியாய் செய்தவன் பா வேந்து.

தமிழ் வாழ்க என்னுன்; தழைத்துவெல் கென்பான்;
அமிழ்தென்றால் என்னுயிர் அன்னைத் — தமிழ்என்பான்;
அம்மொழிக்கு ஊறிழைத்தால் அஞ்சா தெழுந்திடுவான்;
வெம்மைச் சிறைக்கஞ்சா வேந்து.

வையா புரியென்றால் வண்டமிழின் நோயென்பான்;
பொய்யா மொழியென்றால் பூரிக்கச் — செய்வானே!
சாற்றும் தமிழ்ப்பகைக்குச் சாக்காட்டைக் காட்டிடுவான்;
வேற்றுமையை வென்றவன்பா வேந்து.

சேற்றுப் புழுவல்லன்: செந்தமிழ்க்குப் போர்மறவன்;
சோற்றுப் பொதியல்லன்; சொல்லாடும் — ஆற்றலவன்
தண்ணீர் நுரையல்லன்; தாவும் அலையாவான்!
வெங்கதிரா வாழ்ந்தவன்பா வேந்து.

பாட்டால் தமிழாண்ட பாவலன்; மாள்ளூரின்
கோட்டை யிடிக்கக் குமுறுபுலி — கேட்டினின்றும்
நாட்டைப் புதுப்பிக்கும் நற்றொண்டன்; வீணரின்
வேட்டைக்கு மன்னன்பா வேந்து.

முழங்கும் ஏறு!

இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

ஆரியரின் அடிவணங்கி அவர் தொடர்பால்
அறிவற்றுத் தன்மானம் மதிப்பும் கெட்டே
பூரியராய் வல்லடிமைத் தளைகள் பூண்ட
புன்மைகொள் தமிழ்ப் புலவர் நெஞ்சம் கீறி
சீரியசெந் தமிழ்க்குருதி நிரப்பிக்கெட்ட
சிற்றுணர்வார் பழங்குருதி நீக்கிப் பாக்கள்
மாரியெனப் பொழிந்திருந்தான்; இந்த நாடு
மாண்புறவே பாப்புனைந்தான் புரட்சி செய்தான்!

தமிழர்க்கு தன்னுட்சி வேண்டும் என்றே
தளராமல் தமிழ்ப் பகைவர்க் கஞ்சிடாமல்
அமிழ்தான பாவியற்றித் தணலைக் கக்கும்
அரிமுழக்கம் செய்திட்டான் குயிலின் மூலம்!
இமை கண்ணைக் காப்பதுபோல் தமிழைக் காத்தே
இந்நாட்டின் விடுதலைக்கே பகலும் அல்லும்
கமழ்கின்ற பாவேந்தன் உழைத்தான்! காட்டுக்
களிறெனவே உலாவந்தான் தமிழகத்தே!

மாண்பழித்த குலச்சமயக் களைகள் நீங்க
மன்பதைக்குள் சீர்திருத்தம் செய்து நின்றான்!
தான்பிறந்த மண்ணுக்கும் தாய்மொழிக்கும்
தனிப்பெருமை வளர்வதற்கு முழக்க மிட்டான்
வீண்தொல்லை தரும் வடவர் சூழ்ச்சி தன்னை
வடமொழியின் நிலைப்புதனைத் தூள்தூளாக்கி
ஆண்டிடுவோம் எனப்பறையை முழக்கி ஆளும்
அரசினரைக்குலை நடுக்கம் கொள்ளச் செய்தான்!

இறவாத எழில்சிரிப்பும் தொகையும் பெண்மைக்
கேற்றஞ்செய் நற்குடும்ப விளக்கும் ஈந்தான்.
மறவாது தமிழ்உலகம் மடியும் மட்டும்
மணம்வீசத் தமிழியக்கம் தந்தான்; மானம்
இறவாமல் காக்கின்ற பெண்மறத்தை
தமிழச்சி யின்கத்தி காட்டிச் சொன்னான்
உறவர்ன பாவாணர் குடும்பம் விட்டே
ஒளியுடலைப் புகழ் நிறுவி மறைத்துக் கொண்டான்

பார்ப்பனருக் கவன்எதிரி! பண்புகொண்ட
பைந்தமிழர்க் கவன்இனிய கனியின்சாறு!
ஆர்ப்புடைய இந்திவெறி சூழ்ச்சிக் காரர்
அடிவருடும் பரம்பரைக்கு முழங்கும் ஏறு!
கார்க் கொண்டல் அவன்வறண்ட நிலத்துக்கெல்லாம்
களிறனையான்! தமிழ்ப்பகைவர் புலத்துக்கெல்லாம்
போர்க்கென்று தான்அமைத்த மறப்படைதான்
புறப்படுமுன் உயிர் நீத்தான்! பொறுப்பேற்பேமே!

—

மறைந்து வரும் தமிழ்ச் சொற்கள்

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றெழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம்முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக,
செப்பம் மொழிக்குச் சிறப்பு!

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்கள்,

சா. க. பழனிசாமி, சாந்தப்பாடி, கரூர் வட்டம், திருச்சி மா.வ.
பொ. குமாரசாமி, குருநாதம்பாளையம், திருப்பூர் வழி, கோவை.

முகத்தலளவை :

1 புடுக்கோளி – $\frac{1}{4}$ படி
1 வள்ளம் – 4 படிகள் கொண்டது.
1 மிடா – 16 வள்ளங்கள் கொண்டது.
1 பொதி – 6 மிடாக்கள் கொண்டது.

ஈண்டு ஒரு படி என்றது கோவைப்படியாகும்;
சென்னைப் படியில் பாதியாகும்.

அழும்பு – மொடக்கிடி – குறும்பு.

உத்தி – ஏரி நீளமான மண்திட்டு.

ஆக்கம் – மாட்டுச்சாணம்.

தோறை – எருக்கந்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட மஞ்சி.

கற்ருழை மஞ்சி – கற்ருழையிலிருந்து எடுக்கப்படும் நூல் போலும் நார்.

தொண்டு
தொண்டு சுற்றுதல் } பயனின்றி ஊர் சுற்றுதல்.

அருமைக்காரர் – திருமணச் சடங்கு போன்ற சடங்குகளை முன்னின்று நடத்தி வைக்கும் பெரியவர். இவர் உறவினர்களில் ஒருவரேயாவர்.

பிறவை
மூடு } – இளஅகவை கொண்ட ஆடு.

வல்லயம் – ஆளுயரமுள்ள மூங்கில் தட்டியின் ஒரு முனையில் ¾ அடி நீளமுள்ள பட்டையான கத்தி பொருத்தப் பட்டிருக்கும்.

சேகாய் – பனம்பழம். பறைதல் – புறங்கூறுதல்.

அவினி – பனம்பட்டையிலிருந்து உரிக்கப்பட்ட நார்.

கொங்காடை – மழைக்கவிப்பு; சாக்குப்பையால் செய்தது.

இட்டேறி – காட்டுவழி! இருமருங்கும் அடர்த்தியான முள் வேலியைக் கொண்டது.

நெடுந்தட்டு
குறுந்தட்டு } – ஒருவகையான விளையாட்டு.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர் :

திரு. ப. இராசப்பா, இளங்காடு.

அசம்பு – நன்செய் வயலில் மண்டும் ஒருவகைக் களை.

எக்காளம் – திமிர் நிறைந்த காளையின் ஆரவார ஒலி.

ஒப்புடையாள் – அண்ணன் தம்பிகளின் மனைவிகள் ஒருவருக் கொருவர் குறித்துக் கொள்ளும் உறவுப் பெயர்.

கறுக்கு – புல்லரியும் அரிவாளின் அரியப் பயன்படும் பகுதி.

கொடுங்கை – இரு கைகளுக்குள் அடங்கும் ஒரு தொகுதி. (வைக்கோல் முதலியவற்றைக் கைகளால் அள்ளும் வரை யறுக்கப்படாததோர் அளவு).

கொண்டி – கட்டுப்பாடின்றித் திரியும் பண்பு.

சுணைப்பு – அரிவாள் முதலிய வெட்டுக் கருவிகளின் வெட்டும் பகுதியின் கூர்மைத் தன்மை.

தார் – மாடுகளை ஊக்குவதற்குப் பயன்படும் குச்சியில் உள்ள கூரிய இருப்பு முனை.

பற்றுக்கழி – ஏற்றத்தையும் சாலினையும் இணைக்கும் கழி. (சால் – நீர் மொள்ளும் குழிந்து அகன்ற இரும்புக் குடைவை.

பொட்டு – பயறு, உளுந்து முதலிய செடிகளின் உலர்த்திப் பக்குவப் படுத்தப்பட்ட நிலை. இது கால்நடைத் தீனி யாகப் பயன்படுகிறது.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

திரு. வெ. பாலசுப்பிரமணியம், பனையபுரம்,
வழி விக்கிரவாண்டி, தெ. ஆ. மாவட்டம்.

கொங்கை – இராகி, கம்பு போன்ற தவசங்களை மூடியிருக்கும் தோல்.

சேடை – சேருக்கி உழுதல்.

சிக்கூட்டம் – (பரிகாசம்) பகடி.

இணுக்குதல் – ஒடித்தல்.

கீழேயுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

திரு. ஏ. வில்லியம் பவுல், எ. நெடுங்குளம்,
மானாமதுரை வழி.

க. பதவளை கட்டுதல் – நெறி கட்டுதல் (அக்குள்களில்).

உ. அயத்துட்டேன் – மறந்துவிட்டேன்.

ந. பத்துதல் – ஓட்டுதல் (மாடு வண்டி போன்றவற்றை).

ச. உக்கி – தோப்புக்கரணம்.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

பொருநைத்துறைவன், நாகை.

கங்கு – புலாக்கொட்டை.
கண்டக்காய் – பலாப்பிஞ்சு.
காணிக்காரன் – தலைவன். நிலக்கிழான்.
காரி, கோதை, புள்ளி, போலன் – எருதுகளைக் குறிப்பவை.
கைப்பிடித்தவன் – கணவன்.
கொத்தம் – பால்.
செம்பரங்கொஞ்சு – கற்பூரவல்லிச் செடி.
செறை – வாய்க்காய்.
சோம்ப நிழல் கட்டல் – முகில் மறைத்தல்.
தாட்டிமை – வல்லமை.
தீச்சூரல் – வெந்த நாற்றம்.
தேவராடி, கைகாரன் – பூசாரி.
பட்டாங்கி – சுவர்.

பாலிக்கம் – பூப்பு, பெண் பருவமெய்தல்.

பிறமடை – அடுத்த வயல்.

போடுகாடு, செப்புக்காடு – புதிதாக வெட்டப்பட்ட காடு.

மந்தொண்டி – போக்கற்று.

மாலு – எல்லை.

வரிவள்ளம் – கூடை.

வாழ்வரசி – மங்மல மங்கை.

கீழே உள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர் :

தரங்கை பன்னீர்ச்செல்வன், மருங்கூர், தெ. ஆ. மா.

கையாட்டம் – விளையாட்டில் எதிரியால் இரக்கங்கொண்டு தரப் படும் இறுதி வாய்ப்பு.

வல்லா – விளையாட்டத்தில் போடப்படும் ஒறுப்புக்காய்.

அழிம்பு, அழிச்சாட்டியம் – குழந்தையின் வீம்பான செயல்.

மழுமாறுதல் – தயங்குதல்.

மாராயம், மாலாசு செய்தல் – வழக்குரைத்தல்.

கசாலை – சமையலறையுடன் சேர்ந்த தாழ்வாரம்.

அம்மையில் குளிர்தல் – அம்மை நோயால் இறந்துவிடுதல்.

கசியடித்தல் – கடாக்குட்டி, காளைக் கன்று போன்றவற்றின் விதையைக் கூழ்போல் நைந்து போகச்செய்து ஆண்மை யிழக்கச் செய்துவிடல்.

மெனக்கெடு – முயற்சி.

இணுக்கு – முருங்கை போன்ற மரக்கீரைகளின் சிறிய கொத்து.

பட்டரை – களத்து மேட்டில் அமைக்கப்படும் கூலக் குவியல்.

சாலகம் – சாய்க்கடை நீர் ஓடுதற்கான சிறிய வாய்க்கால்.

கிச்சுக்கிச்சு மூட்டல்-அஃகுள் போன்ற இடங்களில் பிறர்நெருடிக் கூச்சமூட்டுதல்.

ஏராங்கடைசி – நெற்களங்களில் அறுவடையின் இறுதி நாளில் உழவர்க்குப் பங்கீடு செய்தலும் களத்தை அழித்துவிடலும்.

மொச்சை – ஆட்டின் மீதிருந்து வீசும் நாற்றம்.

கவுச்சை, கவுள் – மீனின் மீதிருந்து வீசும் நாற்றம்.

முடை — மாந்தரிடத்தே எழும் வெயர்வை நாற்றம்; இன்றியமையா நெருக்கடி நிலைமை.

கறித்துக்கொட்டல் — தீமொழி கூறல்.

வெருவாகெட்டவன் — தகுதியற்றவன்.

நன்னி, துக்குணி — மிகச்சிறியது.

கசங்கு — ஈஞ்சின் தண்டைப் பசுமையிலேயே நசுக்கிக் கயிறு போலாக்கியது.

குசுமல் — பூசலைத் தூண்டிவிடல்.

பொறை தவிர்த்தல் — மகப்பேறெய்தல்.

(கொல்லை) தலைமாடு — தோட்டத்தின் இறுதி எல்லை (வேலி).

உள்ளித் தேங்காய் — உள்ளீடற்ற தெங்கின் காய்.

தொடிசு — சிக்கலுடையது.

ஊர்பட்டது — மிகுதியானது.

இட்டேறுதல் — கை கூடிவருதல்.

செட்டு — சிக்கனம்

தாவிளக்கு, நல்லவிளக்கு — தெய்வ வழிபாட்டிற்குரிய விந்து நெய்விளக்கு.

வாச்சாங்கொள்ளி — பிழையாட்டமாடல்.

வல்லிசு — முழுமையும்.

சல்லிசு — எளிமையானது.

கழுந்து — நட்டு வளர்ப்பதற்காக வெட்டப்பட்ட முதிர்ந்த கிளை.

அலவாங்கு — இருப்புப்பாரை.

பனுட்டு — பனம்பழத்தின் சக்கை.

கோயான் — ஏமாற்றத்திற்குரியவன்.

கரிசனம் — விழுமிய ஈடுபாடு.

பாடு (மீனவர் வழக்கு) — இழப்பு.

கவணை — மாட்டுத் தொழுவத்தில் தீனி வைக்கோல் போல்வன வைக்குமிடம்.

திப்பி — கூலங்களில் கலந்திருக்கும் குப்பைகள்.

கட்டாந்தரை — இறுகி உலர்ந்த தரை.

நொக்குதல் — நன்கு புடைத்தல்

சட்டை செய்தல் — மதித்தல்.

அட்டணைக்கால் — காலை குறுக்காக மடக்கிப் போட்டுக் கொள்ளல்.

அணத்துதல் — நோய் தாளாது அரற்றுதல்.

அச்சக அமைப்புக் கடன் திட்டம்.

(1-6-66 முதல 30-6-66 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

கடன்

		உருபா	சான்றிதழ் எண்.
	க. நூறு உருபா வகை.		
1.	திருவாட்டி. இலக்குமி அம்மாள் மேனுள் இளம்பாலாசிரியை, கீழ்ப்பள்ளிப்பட்டு (வ. ஆ.)	100	16
	(முன் பட்டியலில் வந்த நூறு உருபாத் தொகைக்குச் சான்றிதழ் எண்ணை 17 என்று திருத்திக் கொள்க)		
	உ. **பத்து உருபா வகை.**		
1.	திரு. ப. தமிழ்மணி, காளிப்பாளையம், திருச்சி மாவட்டம்	30	91–93
2.	திரு. நெடுமாறன். அன்பதுமேல் நகரம்	20	94–95
	(கீழே உள்ள தொகை உருபா 70-க்கு மான வரவு சுவடி 4 ஓலே 3 இல் உள்ள பெயர்ப்பட்டியலில் திரு. தேவநேயன் அவர்களின் வரவாக அன்பளிப்புத் தொகையில் காட்டப்பெற்று மொத்தத் தொகையில் சேர்க்கப் பெற்றுள்ளது)		

(முன்பக்கத் தொடர்ச்சி)

புழுக்கை வேலே – அடிமைத் தொழில்.

ஏகடியம் – பகடி, கேவலம்.

காசோண்டி – நீர்முகக்கப் பயன்படும் செப்புக்கலம்.

குய்நாத்து – வஞ்சகம்.

சீண்டை – நெய் வகைகள் கெட்டுவிட்டால் வீசும் நாற்றம்.

பணிக்கன் – கூரை வேய்வோன்.

*

3.	திரு. இரா. நெடுமாறன், கூத்தைப்பார்	10	96
4.	திரு. அன்பு - அண்ணுமலை, நத்தம் (வ. ஆ.)	10	97
5.	திரு. அப்பர் (பாலாசிரியர்) அன்பதுமேல்நகரம்	10	98
6.	திரு. த. திருநாவுக்கரசு, அன்பதுமேல்நகரம்	10	99
7.	திரு. அப்பர், அன்பதுமேல்நகரம்	10	100
8	திரு. எழில்மதி, அனுமந்தக்குப்பம் (வ. ஆ.)	10	101
9.	திரு. செயராமன், வத்தராயன்தெத்து (வ. ஆ.)	10	102
		220	

அன்பளிப்பு

சென்னை கிண்டி பொறியியற் கல்லூரி மாணவர்கள் சார்பில் வந்த தொகை	150
திரு. இளங்கண்ணன், ஆலம்பட்டி மதுரை மா. வ.	1
திரு. இரா. வெற்றிச்செல்வன், மதுரை	24
திரு. முத்து சுந்தரராசன், சுனபேடா, ஒரிசா	6
திரு. மு. ந. துளசிதாசன், சென்னை—20	1
அவர்வழி திரு. மு. திருவேங்கடம்	1
,, திரு. ம. பிரகாசம்	1
மறைமலையடிகள் மன்றம் புன்செய்ப் புளியம்பட்டி	1
செயலர் திரு. பு. கா. பாலசுப்பிரமணியம்	1
அவர்வழி : திரு. இரா. ஆறுமுகன்; பு. புளியம்பட்டி	1
திரு. சு. பாலசுப்பிரமணியன் ,,	1
திரு. அருணகிரி ,,	1
திரு. ஆடலரசு ,,	1
திரு. இளங்கோ ,,	1
திரு. செ. சொ. சாமிநாதன், நம்பியூர்	1
திரு. கா. அரங்கசாமி, ஆசிரியர், மலையப்பாளையம்	1
திரு. வேலுச்சாமி, உயர்நிலைப்பள்ளி மாணவர்	1
திரு. இரா. கோவிந்தன், ஆசிரியர், பச்சையங்காடு	6
அவர்வழி திரு. இராம. நாகப்பன், செட்டிபுலம்	1
திரு. வி. பொன்னழகன் ,,	2
திரு. இராமசாமி, கத்தரிப்புலம்	1
திரு. மு. துரை, ஆ. சொக்கலிங்கம் விராலிமலை (2 ஆம் முறை)	10

திரு. ந. மகாலிங்கம், குடந்தை 5
(திரு. கு. இராசவேலு, சின்னம்பேடு (அஞ்சல்)
தொகுத்து விடுத்தவகை)
திரு. சி. ப. வேந்தன் 10
திருவாளர்கள் அ. சூரியப்பிரகாசம், சி. ந. பரமசிவன்,
மு. வாசுதேவன் (5 உருபா மேனி) 15
திரு. கந்தசாமி 4
திருவாளர்கள்: இரா. சிவஞானம், வ. கோவிந்தராசு,
பழனி, விசாலாட்சி, ஆ, விஜயகம், சு. சந்திரமோகன்,
(தலைக்கு 3 உருபா மேனி) 18
திருவாளர்கள் : கணக்காயன், சி. நா. சௌந்திரபாபு,
நல்-பாட்டு, எல்லப்பன், கா. சுப்பிரமணியன்,
கூ. குமாரசாமி, வா. வைதேகி,
(தலைக்கு 2 உருபா மேனி) 14
திருவாளர்கள் : திருநாவுக்கரசு, கு. கோபால்,
வீரராகவன், விஜயகம், விசுவநாதன், கு. இராசவேலு.
மோகன், பு. திருராமுலு, சி. இரா. சுப்பிரமணியன்
(தலைக்கு ஓர் உருபா மேனி) 9
திருவாளர்கள் : இராதாக்கிருட்டிணன், அ. சண்முகம்,
கி. குப்புசாமி, அரங்கநாதன், (தலைக்கு 50 காசு மேனி) 2
திரு. மா. இராமசாமி ஆசிரியர், கோபி 5
திரு. இ. நடேசன், அ. உ. பள்ளி, பெரும்பாலை 1
திரு. த. மு. கிருட்டிணப்பா ,, 1
திரு. அருள்மணி, பெங்களூர் 21 2
திரு. க ஞானஅரசு, ஆசிரியர், அருப்புக்கோட்டை 10

திரு. தேவநேயன், தஞ்சை அவர்கள் வழி.

திரு. ப. முத்துசாமி, தெற்கு ஐயம்பாளையம் திருச்சி 10
திரு. தொ.ச. சு. பசுபதி நடராசன், தலைக்காடு 6
திரு. சட்டையப்பன், சேகல் மடப்புரம். ,, 5
திரு. பாலசுப்பிரமணியன் சேகல் மடப்புரம் 5
திருவாளர்கள் : (1) ப. கோவிந்தராசன், கருந்திட்டைக்குடி
(2) முத்துச்சாமி. மடப்புரம், (3) ந. வை. வேதலிங்கம்
(4) மா. சிவசாந்தவேல் சேகல் மடப்புரம்; (5) பால
சுப்பிரமணியன், வேளாங்கண்ணி (6) கோ. எசு. கமால்,

பூண்டி, (7) இரா. சங்கர், பூண்டி, (8) ச. பாலு, தஞ்சை, (9) பசுபதி. அமிழ்தவல்லி, மடப்புரம், (10) அ. சுப்பையன், மடப்புரம். (11) சுப்பிரமணியத் தேவர், வேளாங்கண்ணி. (தலைக்கு 2 உருபா மேனி) 22

திருவாளர்கள் : (1) சு. குருநாதன், பூண்டி மலர்க்கல்லூரி. (2) பிச்சை, பூண்டி. (3) இராசசேகரன், கருந்திட்டைக்குடி. (4) குருநாதன், பூண்டி. (5) இலக்குமிநாராயணன், குடவாசல். (6) எழிலன், பி. எசி. ஆயக்கரம்பை. (7) ஞான சம்பந்தம், பி. ஏ. சேரி. (8) இராமதிலகம், தஞ்சை. (9) இரா. சங்கர், பூண்டி. (10) கணேசன், தலைக்காடு (தலைக்கு ஓர் உருபா மேனி) 10

சிதம்பரம் சிவாசி கணேசன் சுவைஞர் மன்றம் 5

373

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம்.

க.	கடன் தொகை	பத்து உருபா வகை	120
உ.		நூறு உருபா வகை	100
ங.	அன்பளிப்புத் தொகை		373
		மொத்தம்	593

முன் மொத்தம். (ஏற்கனவே அன்பளிப்புத் தொகையில் திரு. தேவநேயன் விடுத்த தொகை உருபா 70 கழிந்தபின்) 6040—44

6533—44

பாவாணர் நூல்கள் கிடைக்குமிடம்:

மணி. ஆ. 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு, (வ. ஆ.)

தென்மொழியின் தெளிந்த கொள்கைகள்!

1. தமிழ் நிலத்துள் தமிழே ஆட்சிமொழி ஆதல் வேண்டும்; மாநில இணைப்பு மொழியாகவும் உலகத் தொடர்பு மொழியாகவும் இருக்கத் தகுதியுடைய மொழி ஆங்கிலமே. இவ்விரு மொழிகளுமே தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை பயிற்றப் பெறுதல் வேண்டும். இவையன்றிப் பிற கலை, நுண்கலை, தொழில், அறிவியல் முதலிய பல்துறைக் கல்வியும் தமிழிலேயே பயிற்றல் வேண்டும்.

2. தமிழ் நாட்டுள் தமிழர்களுக்காக நடத்தப்பெறும் தமிழ்த் தாளிகைகள், எழுதப்பெறும் நூல்கள் எல்லாவற்றும் தூய தனித் தமிழே வழங்கப் பெறுதல் வேண்டும். இவ்வமைப்பிற் கடிப்படையாக எல்லா முயற்சிகளையும் செய்தல்.

3. தமிழக அரசியல் கட்சிகள் தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் செய்துவரும் தொண்டில் போலியும், பொய்மையும் கலவா வண்ணம் அவற்றின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்ப துடன் தேவையான பொழுது கண்டிக்கவும் அவற்றை நல்வழியில் திருப்பவுமான நடுநிலைக்குழு ஒன்றினை அமைத்துச் செயற்படல்.

4. தூய தனித்தமிழ் நூல்களையும், பிறநாட்டு அறிவியல் நூல் களையும் தொடர்ந்து வெளியிட்டு வருவதன் வழி மொழியை வளர்த்த லும், மக்களின் பல்வகைப்பட்ட அறியாமையை நீக்குதலும் இவ்வழி உலகத் தமிழரோடும், பிற நாட்டாரோடும் தொடர்பு கொள்ளுதலும்.

5. குமுகாயத் துறையில் சாதிகளையும் அவற்றொடு துணை போவாரையும், போலிச் சமயக் கொள்கைகளையும் அவற்றொடு துணை போவாரையும் அரசியல் துறையில் மக்களை மடமைக்கோ அரசியல் ஆரவாரங்களுக்கோ அழைத்துச் செல்லும் கட்சிகளையும், அறமற்ற ஆட்சியமைப்பையும், பொருளியல் துறையில் செல்வ ஏற்றத்தாழ்வை யும், போலி வாணிகப் புனைசுருட்டல்களையும் சுட்டிக்காட்டிக் கண்டிப்ப துடன் இத்துறைகளில் ஏமாற்றமடையாவழி மக்களை எச்சரித்தல்.

6. சிறுபான்மையினரின் மொழி நலம் பண்பாடு இவையுள் ளிட்ட உரிமை கெடாவண்ணம் செப்பமான குடியரசமைப்புக்கு வழி யமைக்காவிடில், வடவர்க்கே தனியொரு வல்லாண்மையரசாக இயங் கும் நடுவணரசித் தொடர்பிலிருந்து தமிழகத்தை விடுவித்தலும் தமிழ அரசை நிலைப்படுத்தலும்.

7. இவ்வடிப்படைக் கொள்கைகள் என்றும் சிதைந்துபோகா வண்ணம் இவ்வுலகம் உள்ளளவும் நீடித்து நிற்கச் செய்யவும் தொடர்ந்து செயற்படவும் ஒரு நிலையான அமைப்பை அமைத்தலும். அதில் அவ்வக்காலத்து உழைப்புளம் கொண்ட அறிவினரைத் தொடர்பு கொளச் செய்தலும் ஆகும்.

வெளிவந்துவிட்டது !

மொழிப்பெரும் புலவர்

ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ., பி. ஓ. எல்.

எழுதிய அரிய ஆராய்ச்சி மொழிநூல்

THE PRIMARY CLASSICAL LANGUAGE OF THE WORLD

ஆங்கிலம்

உலக மொழிகளினின்று வேறுபட்ட தமிழ்மொழியின் தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, தனிமை, இனிமை, வளமை, இளமை முதலிய எட்டுத் தனிப் பண்புகளையும் உலகெலாம் உணர்ந்து கொள்ளுமாறு, பாவாணர் தம் அஃகியகன்ற ஆராய்ந்த புலமை முற்றும் விளங்க ஆங்கிலத்தில் எழுதிய ஈடும் எடுப்பும் அற்ற முழுமையான மொழி நூல்.

விலை உருபா 15

கிடைக்குமிடம்

பாரி நிலையம்

59, பெருவழி (BROADWAY)

சென்னை-1.